Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 889

National Tamil Daily

மலர் 9
இதழ் 341
தேசிய தினசரி

யாழ்ப்பாணப் பிரதி   தை 6   ஷவ்வால் 19   சனிக்கிழமை (20-1-68)

ஈழநாடு சந்தா

| | | |
|---|---|---|
| மூன்று மாதம் | — | ரூ. 14-00 |
| ஆறு மாதம் | — | ரூ. 26-00 |
| ஒரு வருடம் | — | ரூ. 50-00 |

வாரப்பதிப்பு மாத்திரம்

| | | |
|---|---|---|
| மூன்று மாதம் | — | ரூ. 4-00 |
| ஆறு மாதம் | — | ரூ. 7-50 |
| ஒரு வருடம் | — | ரூ 14-00 |

முற்பணம் கட்டவேண்டும்
தபால் மூலம் அல்லது ஆள் மூலம் அனுப்பப்படும்.

### ஐந்து குடியேற்றத் திட்டங்களில்

# வடமாகாணத்திலிருந்து பலர் இவ்வருடம் குடியேறுவர்

## காணி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி கூட்டிய மகாநாட்டில் தகவல்

— நமது நிருபர் எஸ். நாகேஸ்வரன் —

யாழ்ப்பாணம், சனி

**வட மாகாணத்திலிருந்து நூற்றுக்கணக்கானோர் இவ்வாண்டு குடியேற்றத்திட்டங்களில் குடியேற்றப்படவிருக்கின்றனர்.**

**அம்பல பெருமாள் குளத்திட்டத்தின்கீழ் 300 குடும்பங்களும், விசுவமடுக் குளத் திட்டத்தின் கீழ் 50 இளைஞர்களும், புதிதாகக் கட்டப்படும் கனகாம்பிகை குளத்திட்டத்தின் கீழ் 100 இளைஞர்களும் குடியேற்றப்படுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இத்துடன் முத்தையன் கட்டுகுளகுடியேற்ற திட்டத்தில் 105 விவசாய குடும்பங்களும், 275 இளைஞர்களும் குடியேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

யாழ்ப்பாண மாவட்ட அதிபரின் காரியாலயத்தில் காணி நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். ஸ்ரீகாந்தா கூட்டிய மகாநாட்டில் மேற்கண்ட தகவல்கள் வெளியிடப் பட்டன. யாழ் மாவட்ட அதிபரின் காரியாலயத்தில் இம்மகாநாடு நடைபெற்றது. இவ்வருடத்தில் மேற்கொள்ளவிருக்கும் குடியேற்ற திட்டங்கள் அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியன குறித்து காணி அபிவிருத்தி பகுதிகளில் இருந்து வந்த அதிகாரிகள், உத்தியோகத்தர்களுடன் நிரந்தரக் காரியதரிசி ஆலோசனை நடத்தினர்.

கிளிநொச்சிப் பகுதியில் மத்திய வகுப்பினருக்குக் குடியிருப்பதற்கு 1000 ஏக்கர் காணி ஒதுக்குவதென்றும், இதற்குத்தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

குடியேற்றத் திட்டங்களுக்கு போக்குவரத்து வசதிகள் குறைவாக இருப்பதால் புதிய பாதைகள் அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதென்றும் மகாநாட்டில் உறுதி தெரிவிக்கப்பட்டது.

சென்ற 17-ம் தேதி நிரந்தரக் காரியதரிசி திரு. ஸ்ரீஸ்கந்தராசா யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபர், அரசாங்க அதிபர், காணி அபிவிருத்தி உதவி அதிபர் ஆகியோருடன் மிருசுவில் பெண்கள் குடியேற்றத் திட்டத்துக்குச் சென்றுபார்வையிட்டனர். இத்திட்டத்துக்கு தேவையானவசதிகள் செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கிணறுகளை வெட்டிக் கொடுப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

[8-ம் பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாணத்தில் ஒருவருக்கு மலேரியா

நல்லூர், வெள்ளி

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்தில் ஒருவர் நேற்றுப் பரிசோதனை செய்யப்பட்ட போது அவருக்கு மலேரியா நோய் பிடித்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

வெலிக்கந்தை தோட்டத்தில் கடமையாற்றும் மேற்படி நோயாளர் கந்தர்மடத்தைச் சேர்ந்தவர் எனத் தெரியவருகிறது.

மலேரியா நோய் பிடிக்கப்பட்டுள்ளது இங்கு கண்டு பிடிக்கப்பட்டது சம்பந்தமாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரிகள் கொழும்பு அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து மலேரியா தடுப்பு நடவடிக்கை யாழ்ப்பாணத்தில் தீவிரப் படுத்தப்படவிருப்பதாகத்தெரிய வருகிறது.

## சாவகச்சேரி நகரசபை தேர்தல்: நாளை நடைபெறும்

யாழ்ப்பாணம், சனி

சாவகச்சேரி நகரசபைக்கான புதிய அங்கத்தவரைத்தேர்ந்தெடுப்பதற்கான பொதுத்தேர்தல் நாளை நடைபெறவிருக்கிறது. நகரசபையின் 11 வட்டாரங்களிலும் நடைபெறும் இத்தேர்தலில் 8,800க்கும் அதிகமான வாக்காளர்கள் வாக்களிக்கிறார்கள்.

11 வாக்கு சாவடிகளில் நடைபெறவிருக்கும் இத்தேர்தல் காலை 8 மணி தொடக்கம் 5.30வரை வாக்களிப்பு நடைபெறும். மாலை 5.30 மணி முதல் அவ்வவ் வாக்குச் சாவடிகளில் வைத்தே வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் வெளியிடப்படும். 11 வட்டாரங்களிலும் 32 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

11 வட்டாரங்களிலும் போட்டியிடும் வேட்பாளர்கள் விபரம் வருமாறு:—

1-ம் வட்டாரம் எஸ். சிவசம்பு, வி. தர்மலிங்கம்.

2-ம்வட்டாரம். எஸ். கனகரத்தினம், என். வடிவேலு.

3-ம்வட்டாரம். வி. சின்னத்தம்பி, பி. தம்பிப்பிள்ளை எம். விஞசித்தம்பி.

[8ம்- பக்கம் பார்க்க]

மாணவ ஆசிரியர் பரீட்சைக்குரிய 'பொது அறிவும்-உள்ளூர் அறிவும்' மாதிரி வினாக்களை 6-ம் பக்கத்தில் காண்க.

## மொழிக்கிளர்ச்சியை தமிழக மாணவர் கைவிட்டனர்

### அரசாங்கத்திடம் பொறுப்பு ஒப்படைப்பு

சென்னை, ஜன. 19

மொழிக்கிளர்ச்சியை கைவிட்டு இதுசம்பந்தப்பட்ட பொறுப்பை ராஜ்ய அரசாங்கத்திடமே ஒப்படைப்பது என தமிழக மாணவர்கள் தீர்மானித்துள்ளனர்.

தமிழக முதல் அமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி. கல்வி அமைச்சர் திரு. இரா நெடுஞ்செழியன் ஆகியோரும் மற்ற அமைச்சர்களும் மொழிப் பிரச்னையில் மாணவர்கள் ஈடுபடுவதைவிடுத்து தமது கல்வித்துறையில் கவனம் செலுத்துமாறும் இப்பொறுப்பை ராஜ்ய அரசாங்கத்திடம் ஒப்படைக்கும்படியும் வேண்டுகோள் விடுத்திருந்ததைத் தொடர்ந்தே மாணவர்கள் மேற்படி தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

தமிழக மாணவர்கள்பலர் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தபோது இருவர்மாண்டதும் கல்லூரிகள் மூடப்பட்டதும் தெரிந்ததே.

தமது கிளர்ச்சியை மாணவர் கைவிட்டதைத்தொடர்ந்து தமிழகத்தில் மூடப்பட்ட கல்லூரிகள் மீண்டும் திறக்கப்படவிருக்கின்றன.

### வடபகுதி மீனவர்களுக்கு

## அறிமுக அட்டைமுறை அமுல் நடத்தப்படுமா?

காங்கேசன்துறை, வெள்ளி

வடபகுதி மீனவர்களுக்கு அறிமுக அட்டை வழங்கப்பட வேண்டுமென்ற அரசாங்கத்தின் திட்டம் செயல் முறையில் அமுல் நடத்தப்படுமா என்பது சந்தேகத்துக்கு இடமான முறையிலுள்ளதாகத் தெரிகிறது.

அறிமுக அட்டை எடுக்க விரும்பும் மீனவர்களிடமிருந்துமட்டும் அவர்கள் சம்பந்தப் பட்ட விபரங்கள் கிராமசேவகர்களினால் எடுக்கப்படுகிறதாம். விரும்பாதவர்களிடமிருந்து விபரங்கள் எடுக்கவேண்டுமென்று அரசாங்கம் கிராம சேவகர்களுக்கு உத்தரவிடவில்லையாம.

## நிர்வாகத்தை பரவலாக்க மாவட்டசபைகள் உதவும்

கொழும்பு, வெள்ளி

தேசிய அரசாங்கக் கட்சித் தலைவர்களால்பரிசீலனை செய்யப்பட்டுவரும் மாவட்டசபை நகல் மசோதாவில் நிர்வாகம் பரவலாக்கப்படுவதும் இடம் பெற்றுள்ளது.

மாவட்டசபைகள் மத்திய அரசாங்கத்தின் நேரடிக்கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் என நகல்மசோதா தெரிவிக்கிறது.

1964-ம் வருடம் கூட்டரசாங்கத்துக்கு மாதந்திலா அறிக்கை சமர்ப்பித்துள்ள பார்சுகளின் அடிப்படையிலேயே மாவட்டசபை நகல் மசோதா தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்த நகல்மசோதாவின்படி 22 மாவட்டசபைகள் இயங்கும். நகல் மசோதாவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒவ்வொரு மாவட்டசபையும் அந்தத் தொகுதி எம். பி. யைக் கொண்டிருக்கும் 15-க்குக் குறையாத 30-க்குக் கூடுதலாகாத உள்ளூராட்சிமன்ற அங்கத்தவர் குழுவில் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்கள் இந்த

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### இலவசம்

மில்க்வைற் பார்சோப் மேலுறைகள் ஐந்து சேகரித்து தருபவர்களுக்கு 31-1-1968 வரை ஓர் அழகான காந்தீய நீதிக்கலண்டர் இலவசமாக வழங்கப்படும். மில்க்வைற்சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 2073

### கல்வி

வகுப்புக்கள்

ஜி. சி. ஈ. (உயர்தரம் / சாதாரணம்) கலை விஞ்ஞானம், மாணவ ஆசிரிய பயிற்சி, வர்த்தகம், சிங்களம், ஆகிய வகுப்புக்களுக்கு விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன. யாழ்ப்பாண டியுட்டோறியல் கல்லூரி, [Jaffna Tutorial College] 60, அரசடி வீதி, (தட்டாதெருச் சந்தி) யாழ்ப்பாணம். 2083

### விற்பனைக்கு

காணி

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் பருத்தித்துறை ரோட்டில் புதிய கட்டிடத்துடன் நாலு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. குடியிருக்கவோ தொழிற்சாலைக்கோ சிறந்த இடம். வாங்க விரும்புவோர் விளம்பர இல. 2095 'ஈழநாடு' மேற்பார்த்து என்று எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 2095

காணி

இணுவில் பிரிவில் 11 பரப்பு பனங்காணியும், 5 பரப்பு வரையில் தோட்ட நிலமும் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: M.S. நாதர் வைத்தியசாலை, சுன்னுகம். 2087

காணி

ஊரியாலை கிழக்கு திருமகள் வீதியில் 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. கடிதமூலமோ நேரிலோ தொடர்புகொள்ளவும். சி. நடராசா, 'அழகு மாளிகை', சங்கானை கிழக்கு, பண்டத்தரிப்பு. 2094

## விலையுயர்ந்த மீன்பிடி வலைகள் திருட்டு

அனலைட்டி, வெள்ளி

வறணி, சேந்தாங்குளம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்கள் ஆழ்கடலில் மீன்பிடிக்கப் போட்டிருந்த நைலோன் வலைகள்களவு போய்விட்டனவாம். இது சம்பந்தமாக புகார் செய்யப்பட்டுள்ளது.

வறணியில் 7,000 ரூபாய் பெறுமதியான 37 வலைகளும் சேந்தாங்குளத்தில் 2,500 ரூபாய் பெறுமதியான 12 வலைகளும் மீனவர்களால் மீன்பிடிக்க வீசியதாகக் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக மீனவர்கள் காங்கேசன்துறை மீன்பிடி பரிசோதகருக்கும், அவ்வப்பகுதி கிராமசேவையாளருக்கும் புகார் செய்துள்ளனர்.

வலைகளை இழந்து தொழில்

## வேகமான சேவை

கொழும்பு, வெள்ளி

இப்போதிருப்பதைவிட வேகமாகச் செல்லக்கூடிய ரயில்களை சேவையில் ஈடுபடுத்த இலங்கை அரசாங்கப் புகையிரதப்பகுதியினர் திட்டமிட்டுள்ளனர்.

இதற்கௌரூ33 000,000 செலவிடப்படவிருக்கிறது.

செய்ய முடியாத நிலையில் இருக்கும் மீனவர்களுக்கு சமூக சேவைப் பகுதியிடம் இருந்து நிவாரணம்கிடைக்க ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

விபத்து கொலை வழக்கு

## "டிராக்டர் அவர் மேல் ஏறியது; இறந்து விட்டார்"

சாவகச்சேரி, வெள்ளி

"இடத்தை நாங்கள் துப்புரவு செய்து பாய்விரித்து நெற்சூட்டைப்போட்டோம் டிராக்டர் சாரதி சூட்டை மிதித்துக்கொண்டிருந்தார். சுமார் 3 மணித்தியாலத்தின்பின் அங்கு வந்த எதிரி டிராக்டர் சாரதியுடன் கதைத்தார். மெசின் சத்தத்தில் என்ன கதைத்தார் என்று கேட்கவில்லை. சிறிது நேரத்தில் எதிரி டிராக்டர் செலுத்திச் சூடு மிதித்தார். சிறிது நேரம் டிராக்டரை முற்பக்கமாகச் செலுத்தினர் பின்பு பின்னுல் ஓடிச் சூடுமிதித்தார். இறந்த சண்முகம் அடுத்த வயல்வரம்புடன் இருந்தார். அவரை நோக்கி டிராக்டர் பின்னுல் சென்று வரம்பால் ஏறி அவர்மேல் ஏறியது. மெசின் நிற்பாட்டப்பட்டபின் பார்த்தபோது சண்முகம் டிராக்டருக்கு நடுவே கிடந்தார். அவரை வெளியில் எடுத்தபோது அனுங்கினர். சிறிது நேரத்தில் இறந்துவிட்டார்."

அக்கராயன் குளம் டிராக்டர் விபத்துக்கொலை வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்கினராசா முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டபோது சாட்சியமளித்த வன்னேரிக்குளம் வாசியான கணபதிப்பிள்ளை செல்லத்துரை (39 வயது) மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் சென்ற வருடம் செப்டம்பர் மாதம் சுப்பிரமணியம் நீலமேகம் என்பவர் டிராக்டரைக் கவலையீனமாகவும் லைசென்ஸ் இல்லாதும் செலுத்தி மருதப்பு சண்முகம் என்பவருக்கு மரணம் விளைவித்தாரென்றும் மற்றும் ஐந்து குற்றச்சாட்டுகளின் பேரில் கிளிநொச்சிப் பொலிசாரால் குற்றம் சாட்டி வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மேல் விசாரணை அடுத்த மாதம் 3-ம் திகதி நடைபெறும்.

## றுல் வியாபாரி கடத்தல் வழக்கு

### பாரப்படுத்தப்பட்டது

சாவகச்சேரி, வெள்ளி

கடந்த சில மாதங்களாகச் சாவகச்சேரி நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டுவந்த கிளிநொச்சி றுல் வியாபாரி கார்வாலியோ கடத்தல் வழக்கு விசாரணை முடிவில் மாவட்ட நீதிமன்ற விசாரணைக்காகப் பாரப்படுத்தப்பட்டது".

இவ்வழக்கில் சென்ற வருடம் ஜூன் மாதம் சதாசிவம் இரத்தினம், பிலிப் ராசதுரை, கதிரவேலு காளிமுத்து பி. தம்பிராசா அல்லது நமசிவாயம், கே. தம்பிராசா அல்லது சின்னத்துரை. பொன்னையா தனபாலசிங்கம் ஆகிய ஆறுபேரும் கிளிநொச்சியில் றுல் வர்த்தகரான எம். கார்வாலியோ [52வயது] என்பவரைக் கடத்திச் சென்று தர்மபுரம் காட்டில் வைத்துப் பயமுறுத்தி, அடித்து பலாத்காரம் பிரயோகித்ததாக எல்லாமாகப் பத்துக் குற்றச்சாட்டுகளின் பேரில் கிளிநொச்சிப்பொலிசாரால் குற்றம்சாட்டி இவ் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

வர்த்தகர் கார்வாலியோவை எதிரிகள் ஆறுபேரும் கடத்திச்செல்லும்போது உபயோகிக்கப்பட்ட வாகனங்களில் கார் ரூபா ஐயாயிரம் பிணையிலும் டிராகடர் ரூ. 7,500 பிணையிலும் எதிரிகள் ஆறுபேரும் ஒவ்வொருவரும் தலா ரூபா 2,500 பிணையிலும் செல்ல ஆரம்பவிசாரணையின்போது அனுமதிக்கப்பட்டிருந்தனர்

## தீர்த்தக்கரை மடத்தில் சமையல்

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் திருவடிநிலை வாகைவயிரவர்கோவிலுக்கு அருகாமையில் தீர்த்தமாடுபவர்கள், ஓய்வுநேரங்களில் வந்து குளிப்பவர்கள் ஆடை மாற்றுவதற்காகக் கட்டப்பட்டுள்ள அழகிய மண்டபம் சமையலசெய்யும் மண்டபமாகச் சிலரால் பாவிக்கப்பட்டுவருகின்றது. ஆயிரக்கணக்கான ரூபாயைக் கொண்டு கட்டப்பட்ட இம்மண்டபம் தக்க மேற்பார்வை இல்லாததால் மிக விரைவில் பாழடைந்துபோய்விடுமென அஞ்சப்படுகிறது.

## திறப்புக்கோர்வை யாருடையது?

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் கண்டெடுக்கப்பட்ட திறப்புக்கோர்வையொன்று ராணி சினிமா தியேட்டரைச் சேர்ந்த திரு. எஸ். சிவரத்தினத்தினுல் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

## தந்தை ஏசினுராம் இளம்பெண் தற்கொலை

மல்லாவி, வெள்ளி

காலையில் படுக்கையைவிட்டு எழும்ப அதிக நேரமாகிவிட்டதென்று தந்தை ஏசினுராம். இதனைத் தொடர்ந்து வறணி வடக்கைச் சேர்ந்தவரும் சொகிகாவில் குடியேற்றத்திட்டத்தில் விவாகரத்துச் செய்துவிட்டு தந்தையுடன் வசித்துவந்தவருமான வே. அம்பிகபதி [18வயது] என்ற இளம் பெண் கிருமிநாசினி அருந்தித் தற்கொலைசெய்துகொண்டார்.


## விளம்பரம்

### சுன்னுகம் பட்டணசபை சோலைவரி

1967-ம் ஆண்டு 4-ம் கந்தாயத்திற்குரிய சோலைவரியை பட்டணசபைக் கந்தோரில் அல்லது வரியறவிடுபவரிடம் 25-1-68-ல் அல்லது அதற்கு முன் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளவும். குறிப்பிட்ட திகதிக்குள் வரி செலுத்தத் தவறின் கூடுதலாக 10 வீத விருந்துப் பணமும் வரிப் பணத்துடன் சேர்த்து அறவிடப்படுமென்பதை சுன்னுகம் பட்டணசபை வரியிறுப்போருக்கு தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பொ. நாகலிங்கம்
தலைவர்,
பட்டணசபை, சுன்னுகம்.

பட்டணசபை அலுவலகம்,
சுன்னுகம், 19-1-68.

414

JAFFNA SCHOOL OF ACCOUNTANCY AND HIGHER STUDIES
housed at
No. 10, Stanley Road, Jaffna
offers tuition in all parts of the following examinations:
A. C. W. A.
A. C. C. A.
A. I. B.
and A. I. C. S.
Week-end lectures commence on 21-1-68.
at 9-30 a. m.
For application form contact the SECRETARY.

411


## சீமேந்து தொழிற்சாலை கொண்டாடும்

காங்கேசன்துறை, வெள்ளி

காங்கேசன்துறை சீமெந்துத்தொழிற்சாலை இம்முறை கோலாகலமான முறையில் சுதந்திரதின விழாவை நடாத்துவதற்கு சீமேந்துதொழிற்சாலை ஊழியர்கள் சுறுசுறுப்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

சுதந்திரதின விழாவில் விளையாட்டுப் போட்டிகள், கலைநிகழ்ச்சிகள், வாணவேடிக்கைகள் மற்றும்பலஇடம் பெறவிருக்கிறது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக சீமேந்து கூட்டுத்தாபனத்தலைவர் திரு. விஜயநாயக்க கலந்துகொள்ளவிருக்கிறுர். சீமேந்துக்கூட்டுத்தாபன ஜெனரல் மனேஜர் திரு. பேரம்பலம், திரு. சுப்பிரமணியம் ஆகியோர்களும்கலந்து கொள்ளவிருக்கிறுர்கள்.

## வெள்ள நிவாரணம்

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களுக்கு வெள்ள நிவாரண நிதி வழங்கப்பட்டுள்ளது.

300ரூபா முதல் 500 ரூபா வரை வெள்ள நிவாரண நிதி வழங்கப்பட்டுள்ளது.

சுமார் ஐநூறுக்குமேற்பட்டோர் நிவாரணம் பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

## மீட்டர் கணக்கு எடுப்பாளர் இல்லை

காங்கேசன்துறை, வெள்ளி

காங்கேசன்துறைப் பட்டினசபைக்கு மீட்டர் கணக்கெடுப்பாளர் இல்லாததால் வேறு சில ஊழியர்கள் இந்த வேலையைக் கவனித்து வருகின்றனர். இதனுல் மீட்டர் கணக்கெடுப்பில் வித்தியாசங்கள் ஏற்படுவதாக பொதுமக்கள் புகார் செய்கின்றனர்.


இப்பொழுது நடைபெறுகிறது

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] — பிளாஸா [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டுநகர்] — ஸ்ரீகிருஷ்ணு [திருமலை]
லிடோ (மொறவை) — மொடேர்ன் [பதுளை]

எம். ஜி. ஆர். சரோஜாதேவி



மற்றும் பலர் நடித்த
சரவண பிலிம்ஸ்

படகோட்டி

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில் 4 காட்சி
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா நடித்த
காவல்காரன்

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 10-00 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெய்சங்கர்—ஜமுனு நடித்த
குழந்தையும் தெய்வமும்

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45
Jim Reeves
in
KIMBERLEY JIM
(Color)

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p.m.
Yul Bryner
in
Tarras Bulba


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவா ஆயுத பரிகரண மகாநாட்டில் அணு ஆயுத பரவல்தடை நகல் ஒப்பந்தம்

## ரஷ்யாவும் அமெரிக்காவும் இணைந்து சமர்ப்பித்தன

ஜெனீவா, ஜன. 19

அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்த நகலொன்றை அமெரிக்காவும், ரஷ்யாவும் சேர்ந்து, இங்கு கூடியுள்ள 17 நாட்டு ஆயுத பரிகரண மாநாட்டில் நேற்றுச் சமர்ப்பித்தன.

ஒரு மாத காலமாக, இவ்விரு நாடுகளுக்குமிடையே, இந்த நகல் ஒப்பந்த விதிகள் சிலவற்றின் மீது இருந்து வந்த பிணக்கு, இப்போது தீர்ந்துவிட்டது.

இந்த நகல் ஒப்பந்தத்தை ஐ. நா. பொதுக்காரியதரிசி யூ தாண்ட் வரவேற்றுள்ளார்.

நகல் ஒப்பந்தத்தை' அணு ஆயுத பரவலைத் தடுக்கும் மனிதனின் முயற்சியில் ருமைற்கல்' என அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சன் வர்ணித்துள்ளார். பிரிட்டிஷ் பிரதமர் வில்சனும் இதே கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஆனாலும், அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் இம்மூன்று நாடுகளையும் தவிர, உலகில் அணு ஆயுத உற்பத்தி நாடுகளாக விளங்கும் மற்றும் இரு நாடுகளான பிரான்சும், சீனாவும் உத்தேச ஒப்பந்தத் திட்டத்தில் தமக்கு எவ்வித அக்கறையுமில்லை எனத் தெரிவித்துள்ளன.

## பாகிஸ்தான் தேசிய அவாமி கட்சித் தலைவர் கைது

கராச்சி, ஜன. 19

பாகிஸ்தானிலுள்ள தேசிய அவாமி கட்சியின் தலைவரான ஷேக் மஜீபி அமானைப் பாகிஸ்தான் அரசாங்கம் கைதுசெய்துள்ளது. அவர், பாகிஸ்தான் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், கைது செய்யப்பட்டுள்ளார்.

கிழக்குப் பாகிஸ்தானை, நாட்டின் இதர பகுதிகளிலிருந்து தனியாகப்பிரித்தெடுக்கும் சதியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், அவர்கைது செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இதேகுற்றச்சாட்டில் முன்னர் தடைக்காவலில் வைக்கப்பட்டிருந்த மற்றும் 28 பேர், இப்போது கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மீது விதிக்கப்பட்ட தடைக்காவல் உத்தரவுகள் நீக்கப்பட்டுள்ளன.

# தென்வியட்னமிலிருந்து அமெரிக்க துருப்புகள் வெளியேறவேண்டும்

## வியட்னும் சமாதானத்துக்கு ஹனோயின் புதிய நிபந்தனை

ரங்கூன், ஜன. 19

வடவியட்னும்மீது அமெரிக்கா நிபந்தனை எதுவுமின்றிக் குண்டுவீச்சை நிறுத்துவதுடன், தென்வியட்னுமிலிருந்து அமெரிக்கத் துருப்புகள் வாபஸ் பெறப்பட வேண்டுமென்று ரங்கூனிலுள்ள வடவியட்னும் தலைமை ஸ்தானிகர் அறிவித்துள்ளார்.

வியட்னும் சமாதானத்துக்கான வடவியட்னும்திட்டத்தைத் தாம் பரிசீலனை செய்து வருவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சன் அறிவித்ததைத் தொடர்ந்து, வடவியட்னுமிடமிருந்து உத்தியோகபூர்வமாகக் கிடைக்கப் பெற்ற முதற்பதில் இதுவேயாகும்

முன்னர் அமெரிக்கா குண்டுவீச்சை மட்டும் நிறுத்த வேண்டுமென்று வலியுறுத்தி வந்த வடவியட்னும், இப்போது அத்துடன் அமெரிக்கா தென்வியட்னுமிலிருந்து தனது துருப்புகளை நீக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் வடவியட்னும்மீதான குண்டுவீச்சை அமெரிக்கா நிறுத்துவதே, வியட்னும் சமாதானத்துக்கு வழிசெய்யும் முதல் நடவடிக்கையாக அமைய வேண்டுமென்பதை ஐ. நா. பொதுக் காரியதரிசி யூ தாண்ட் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். நியூயோர்க்கில் பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையிலேயே யூ தாண்ட் இவ்வாறு தெரிவித்தார்.

## ஐ. அ. கு. இராணுவ அதிகாரி மரணம்

கெயிரோ, ஜன. 19

ஐக்கிய அரபுக்குடியரசில் சிரேஷ்ட இராணுவ உத்தியோகத்தர் ஒருவர் இயற்கைகாரணங்களினால் இராணுவ ஆஸ்பத்திரியில் காலமாகிவிட்டாரெனக் கெயிரோவில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தியோகத்தர் ஜனாதிபதி நாஸருக்கெதிராக சதிமுயற்சியொன்றில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்பட்டிருந்தார்.

## கவுட்டமாலாவில் அவசரகால நிலை

கவுட்டமாலா, ஜன. 19

கவுட்டமாலாவில் ஏற்பட்டுள்ள பலாத்காரச் சம்பவங்களைத் தொடர்ந்து அங்கு 30 நாட்களுக்கு அவசரகாலநிலைச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசியல் சாசனத்தின் கீழ் அளிக்கப்படும் உரிமைகள் யாவும் தடை செய்யப்பட்டுள்ளன.

அரசியற் கட்சிகளும் இயங்க முடியாது தடை செய்யப்பட்டிருக்கின்றன.

பலாத்காரச் செயல்களில் ஈடுபடுபவர்களை, விசாரணையின்றித் தடுப்புக் காவலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரண்டு அமெரிக்கத் தூதரக இராணுவ சிரேஷ்ட உத்தியோகத்தர்கள், இயந்திரத் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதும், மற்றும் ஒரு கவுட்டமால அரசியல்வாதியும், அவரது மெய்க்

(6-ம் பக்கம் பார்க்க)

# 'மதசார்பான கோஷ்டி எதிலும் மலேஷியா சேராது'

## பிரதமர் துங்கு வலியுறுத்தல்



கோலாலம்பூர், ஜன. 19

மலேஷியா, எந்தவிதமான மதசார்பான கோஷ்டியையும் உருவாக்க விரும்பவில்லையென, அதன் பிரதமர் திரு. துங்கு அப்துல்ரஹ்மான் கூறியுள்ளார்.

மலேஷியாவுக்கு விஜயம் செய்துள்ள ஈரான் மன்னர் ஷாவுக்கு அளித்த கௌரவ விருந்துபசாரமொன்றிலே பேசுகையில், அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இஸ்லாமே மலேஷியாவின் மதமாக விளங்கினாலும், நாட்டில் மதச்சுதந்திரம் நிலவ அரசியற் சாஸனத்தில் உரிமைகள் அளிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

'பல மதங்களும், இனங்களும் வாழும் நாடாகிய மலேஷியாவில், வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே எமது லட்சியமாக இருந்து வருகிறது' என்றார் துங்கு.

துங்குவின் இந்தப் பேச்சு, அவர் ஓர் உத்தேச இஸ்லாமிய நடுகள் மாநாட்டில் பங்குபற்றுவாரென இங்கு நிலவிய சந்தேகத்தை நீக்கியுள்ளதாகக் கருதப்படுகிறது.

## கம்போடியாவின் நடுநிலைமை பாதுகாக்கப்பட வேண்டும்

—யூ. தாண்ட்

நியூயோர்க், ஜன. 19

கம்போடியாவின் நடுநிலைமையை எல்லாத் தேசங்களும் மதிக்க வேண்டுமென ஐ. நா. பொதுக் காரியதரிசி யூ தாண்ட் கேட்டுக் கொண்டுள்ளார். கம்போடியாவின் நடுநிலைமையைப் பாதுகாக்கும் உரிமை சர்வதேச கட்டுப்பாட்டுக் கமிஷனுக்கு உண்டு என்பதையும் அவர் வலியுறுத்தினர்.

பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் இவ்விதம் கூறியிருப்பது, தப்பியோடும் வடவியட்னும் அல்லது வியட்கொங் துருப்புகளைக் கம்போடியாவுக்குள் துரத்திச் செல்ல அமெரிக்கா கோரி வரும் உரிமையை மறுப்பதாக அமைந்தள்ளதாகப் பார்வையாளர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

# ரஷ்ய குற்றச்சாட்டை அமெரிக்கா மறுத்தது

வாஷிங்டன், ஜன. 19

வியட்னும் போரை அமெரிக்கா, கம்போடியாவுக்குளும் விஸ்தரிக்க முயற்சி செய்வதாக ரஷ்யா சுமத்தியுள்ள குற்றச்சாட்டை அமெரிக்கா மறுத்துள்ளது.

அப்படிப் போரை விஸ்தரிக்கும் நோக்கம் எதுவும் தனக்குக் கிடையாதென்று அறிவித்துள்ள அமெரிக்கா, கம்போடியாவின் நடுநிலைமையை உறுதிப் படுத்தும் வகையில், சர்வதேசக் கட்டுப்பாட்டு கமிஷனைப் பலப்படுத்த உதவுமாறு ரஷ்யாவைக் கோரியுள்ளது.

# பிரிட்டிஷ் பிரதமர் வில்சனின் செலவு குறைப்பு திட்டம்

## காமன்ஸ் சபை அங்கீகாரம்

லண்டன், ஜன. 19

பிரிட்டனின் பாதுகாப்பு, சமூக சேவைகள் ஆகியவற்றில் பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் அறிவித்துள்ள செலவுக் குறைப்புகளுக்கு பிரிட்டிஷ் காமென்ஸ் சபை அங்கீகாரம் அளித்துள்ளது.

இந்தச் செலவுக் குறைப்புகள் சிலவற்றிற்கு பிரிட்டிஷ் தொழிற் கட்சியைச் சேர்ந்த 25 புரட்சிகர மெம்பர்களின் எதிர்ப்பு இருந்தும்கூட, அவை 100-க்கு அதிகமான பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டன.

வில்சனின் திட்டங்களை ஆட்சேபிக்கும் கன்சர்வேட்டிவ் கட்சியின் தீர்மானமொன்று, 295 பெரும்பான்மை வாக்குகளால், நேற்று பிரிட்டிஷ் காமென்ஸ் சபையில் தோற்கடிக்கப்பட்டது.

வெளிநாடுகளில் உள்ள தனது தளங்களிலிருந்து தனது துருப்புகளை பிரிட்டன் அதிவிரைவாக வாபஸ் பெற முடிவு செய்துள்ளதை ஆட்சேபித்து பார்லிமெண்டரிக் கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர் ஒருவர் ராஜினாமாச் செய்துள்ளார். தமது கட்சித் தலைவர்கள் மீது தமக்கு நம்பிக்கை இல்லை எனத் தெரிவித்த அவர், தொடர்ந்து சுயேச்சை அங்கத்தவராகப் பார்லிமெண்டில் இருப்பார்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் செலவுக் குறைப்புத் திட்டங்கள்மீது, பிரிட்டிஷ் எதிர்க்கட்சித் தலைவரான திரு. எட்வார்ட் ஹீத் பேசுகையில் அவை சர்வதேச நம்பிக்கையை மீண்டும் நிலைநாட்டத் தவறிவிட்டன என்று குறிப்பிட்டார். விரைவில் பிரிட்டனில் ஒரு பொதுத்தேர்தலுக்கு அவர் கோரினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சிறுசிறு தொந்தரவுகள் ஏற்படினும் சிலர் அமைதி குலைந்து ஆத்திரப்படுகிறார்கள். ஆனால் மனம் பரிசுத்தமடைந்து கட்டுப்படுத்தப்படின் எந்த நிலைமையையும் எதிர் நின்று அமைதியாக இருக்கலாம். மனதை சுத்தப்படுத்தி கட்டுப்படுத்த சுலபமான வழி இறைவன் பெயரை சதா உச்சரிப்பதுதான்.

— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்கஸு தை மீ 6உ (20-1-68

## விவசாயிகளுக்குப் பரிசு

உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு விவசாயிகளுக் பரிசுவழங்குவதின் மூலம் ஊக்கமளிக்க விவசாய அமைச்சு திட்டமொன்றைக் கொண்டு வரவிருக்கிறது. மாவட்ட ரீதியாக நடைபெறவிருக்கும் விவசாயப் போட்டிகளில் பரிசுபெற்று விவசாய மன்னர்களாகத் தெரிவு செய்யப்படும்விவசாயிகளுக்குத் தங்கப் பதக்கங்கள், டிரான்சிஸ்டர் ரேடியோக்கள், பைசிக்கல்கள் முதலிய உபயோகமான பொருள்கள் பரிசாக வழங்கப் படவிருக்கின்றன.

உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு இந்தியாவில் சில பரிசுத் திட்டங்கள் கொண்டுவரப்பட்டு அவை ஓரளவு வெற்றியுமளித்திருக்கின்றன. பால் உற்பத்தியை அதிகரிப்பதிற்காக பசு வளர்ப்பில் அக்கறை செலுத்துவோருக்கு 'கோபாலரத்தினம்' என்ற பட்டமும் வழங்கப்பட்டு வந்தது. இதுவும் ஓரளவு பயன் பெற்றுக் கொடுத்தது. சமீபத்தில் ஜனத்தொகைப் பெருக்கத்தைக் குறைப்பதற்காக குடும்பக்கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கும் குடும்பங்களுக்கு 'டிரான்சிஸ்டர் ரேடியோ' போன்ற பரிசு வழங்கவும் இந்திய அரசாங்கம் முன்வந்தது. பரிசுகளும் பட்டங்களும் நேர்மையான முறையில் வழங்கப்பட்டால் பொது மக்களுக்குப் பல துறைகளிலும் உற்சாகமேற்பட முடியும்.

மாவட்ட ரீதியாக விவசாயப் போட்டி நடத்தி யார் அதிக அளவில் நெல் மற்றும் உணவுப்பொருள்களை உற்பத்தி செய்கிறார்களோ அவர்களுக்குப் பரிசு வழங்குவது விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மட்டுமல்லாது மற்றவர்களையும் விவசாயத்தில் ஈடுபடுத்த ஊக்கமளிப்பதாக இருக்கும். ஆனால் இந்தப் பரிசுகளும் பட்டங்களும் உண்மையில் உணவு உற்பத்தியைப் பெருக்க உழைப்பவர்களுக்குக் கிடைப்பதாக இருக்க வேண்டும். பரிசு பெறும் விவசாயிகள் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு என்ன முறைகளைக் கையாண்டார்கள் என்பதையும் அவர்கள் மூலமாக இதர மக்களுக்கும் வெளிப்படுத்த வேண்டும்.

உணவு, உபஉணவுப் பயிர்ச் செய்கையிலீடுபட்டு மழை, வெள்ளம், வரட்சி போன்ற இயற்கை காரணங்களால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்குத் தகுந்த நஷ்டஈடு கிடைக்கவும் விவசாய அமைச்சு வழிவகை செய்ய வேண்டியது அவசியம். இதற்கு பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம் நாடு முழுவதிலும் அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டியது அவசியமாகும். பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு நஷ்டஈடு கிடைக்காமல் எத்தனை பரிசுத் திட்டங்கள் கொண்டு வரப்பட்டாலும் விவசாயிகளுக்கு ஊக்கமளிக்க முடியுமா?

## ஆடம்பரச் செலவு

லண்டனிலுள்ள இலங்கை ஹைகமிஷன் இம்முறை சுதந்திரதினக் கொண்டாட்டத்தை சிக்கனமாக நடத்த உத்தேசித்துள்ளதாகவும் உத்தியோகரீதியான கொண்டாட்டம் எதுவும் இருக்க மாட்டாதென்றும் ஒரு செய்தி கூறுகிறது. சுதந்திரதினம், விடுதலையடைந்தநாடுகள் ஒவ்வொன்றும் ஆனந்தமாகக் கொண்டாட வேண்டிய தினம்தான் ஆனால் வெறும் அரசியல் சுதந்திரததைக் கொண்டாடி என்ன பயன்? பொருளாதார சுதந்திரம் கிடைத்தால்தான் அரசியல் சுதந்திரத்தில் அர்த்தமிருக்கும். நமது நாடு பொருளாதார சுதந்திரம் பெறவில்லையென்பது தெரிந்த விஷயம். அரசாங்க இலாகாக்களும் கூட்டுஸ்தாபனங்களும் மற்றையோரும், நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலையை உத்தேசித்து செலவுகளைச் சுருக்கி சிக்கனமாக நடந்துகொள்ள வேண்டுமென்று பிரதமர் அடிக்கடி வற்புறுத்தி வருகிறார். அரசாங்கமே இதற்கு வழிகாட்டவேண்டும். பொருளாதார சுதந்திரம் பெறும்வரை சுதந்திர தினக்கொண்டாட்டங்களை மிகச்சிக்கனமாக ஆடம்பரமின்றி நடத்த வேண்டுமென அரசாங்கம் சங்கற்பம் செய்துகொள்ளவேண்டும். லண்டனிலுள்ள ஹைகமிஷன் மட்டுமல்ல வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் யாவும் சுதந்திரதினக் கொண்டாட்டங்களை மிகச் சுருக்கமாக நடத்தவேண்டும்.

சிக்கன நடவடிக்கையாக பிரிட்டன் தென் கிழக்காசியாவிலிருந்து தனது படைகளையே வாபஸ் பெறவிருக்கிறது. இலங்கையும் சில சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ளவாய்ப்பிருக்கிறது. அவசியமில்லாமல் சில வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களை மூடி விடுவது அல்லது தூதரக அதிகாரிகளைக் குறைத்துக் கொள்வது இதில் ஒன்றாக இருக்கலாம்.

# சங்க இலக்கிய [ஆ...]

இற்றைக்குச் சற்று ஏறத்தாழ 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில தோன்றிய எட்டுத்தொகை பத்துப்பாட்டு திருக்குறள் என்பன சங்ககால நூல்கள் என்று கூறப்படும். இந்நூல்களிற் கூறப்படும் செய்திகள் அகப்பொருள், புறப்பொருள் என இரண்டு வகைப்படும். மக்களின் வாழ்க்கை முறைகள் அனைத்தும் இவ்விருவகைப்பொருள்களில் அடங்கும். இப்பொருள்களின் இலக்கணம், தொல்காப்பியம் முதலிய நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. பிறமொழியாளர்கள், எழுத்தும் சொல்லும் பற்றியே தம்முடைய மொழிகளுக்கு இலக்கணம் வகுத்துள்ளனர். ஆனால் தமிழ்மொழியில் இலக்கியத்தில் அமையும் இவ்விருவகைப் பொருள்களுக்கும் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. இது தமிழ்மொழிக்கே உரிய சிறப்பியல்பாகும்.

### அகப்பொருள் இயல்புகள்

மக்களின் பண்பாட்டிற்கு அடிப்படையானது. இயற்கை என்பதனை அக்கால மக்கள் நன்கு அறிந்திருந்தார்கள். அதற்கு ஏற்ப நிலத்தை முல்லைகுறிஞ்சி,மருதம் நெய்தல், பாலை என ஐந்து வகையாகப் பிரித்து உணர்ந்தார்கள். இப்பகுபாடு தமிழுக்கே உரியது. அகப்பொருள் இலக்கியங்கள், இப்பாகுபாட்டினை முழுதும் பின்பற்றி அமைந்துள்ளன. இவ் ஐந்துவகை நிலங்களுக்கும் தனித்தனியாக உரிய காலங்களும், கருப்பொருள்களும், உரிப்பொருள்களும் அகப்பொருள்பற்றிய இலக்கண நூல்களிற் கூறப்பட்டுள்ளன.

## லெப. கரு. இராமநாதன் செட்டியார்

அண்ணாமலை பல்கலைக்கழக தமிழ்துறை
பேராசிரியர்

சுருக்கமாகச் சொன்னால் அகப்பொருள் பற்றிய செய்யுட்கள் அன்பின் வரலாறு கூறுவனவாகும். இச்செய்யுட்கள் நாடகப் பண்புடனும், சிறுகதை வடிவிலும் அமைந்து காணப்படுகின்றன. அக்காலத்து அகப்பொருட் செய்யுடகள், பிற்காலச் செய்யுட்கள்போலக் காதலர்களின் உடல் அழகை மிகுதியாகப் புனைந்துரைப்பன அல்ல. அவர்களின் உள்ளத்து உணர்ச்சிகளையும் பண்புநலன்களையுமே பெரும்பாலும் புனைந்துரைப்பனவாகும்.

தொகை நூல்களில் காணப்படும் அகப்பொருட் செய்யுட்கள் ஒவ்வொன்றும் தனித்தனிக் கருத்துடையன. இவை பலரால் பாடப்பெற்றன. கருத்துக்களின் தொடர்பு கருதி இவை முறைப்படுத்தப்பட்டன அல்ல. இக்கருத்துக்கள் ஒரு தொடர் நிகழ்ச்சியாக அமை

[உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு கருத்தரங்கில்பேசியப்பச்சின் சுருக்கம்.]

யுமாறு கோவைப்படுத்தப்பட்டு ஒவ்வொருவரால் இயற்றப்பட்ட தனி நூல்களே பிற்காலத்து எழுந்த கோவைகளாகும்,

மக்களிடத்தில் எழுந்த பால் உணர்ச்சியுடன் கூடிய காதல் பிற்காலத்தில்தோன்றிய கடவுட்பாடல்களிலும் இறையுணர்வோடு இணைந்து வெளிப்பட்டது. இது, காலப்போக்கில் இலக்கிய வளர்ச்சியில் நேர்ந்த வேறுபாடாகும்.

பிரிவுதான் அன்பின் உறுதியை அளந்து அறியும் உரைகல்லாகவும், உடல் உணர்ச்சியையும் கடந்து நிற்கும் அன்பு நிலையை விளக்கிக் காட்டும் சுடர் ஒளியாகவும் இருக்கின்றது. பிரிவில் பல பிறப்புக்களிலும் தொடர்ந்துவரும் அன்பு உணர்ச்சியின் முழு உருவமும் முழு விரைவும் புலவர்களால் காட்டப்படுகின்றன. ஆகலால் அகப்பொருள்பற்றிய செய்யுட்களில் பிரிவுபற்றியசெய்யுட்களே மிகுதியாகக் காணப்படுகின்றன.

புறப்பொருள்பற்றிய சங்கச் செய்யுட்களில் தமிழக வரலாற்றுக் குறிப்புகள் சிலவும் இடம்பெற்றுள்ளன. சில வரலாற்றுக் குறிப்புக்கள் சங்க நூல்களுள் ஒரு நூலில் அன்றிப் பிற சங்க நூல்களிலும் காணப்படுகின்றன. சங்கச் செய்யுட்கள் உள்ளதை உள்ளவாறு உரைக்கும் இயல்பின. ஆயினும் சிலசெய்யுட்களில், கற்பனை சிறிது மிகுதியாகவும் காணப்படுகின்றன.

அக்கால வரலாறுகளை அறிவிப்பதில் அகப்பொருள் நூல்களைவிட புறப்பொருள் நூல்கள் சிறந்தனவாகும்.

புறப்பொருள் பற்றிய செய்யுட்கள் மேற் கூறிய வாறு வீரம், வன்மை, அறிவுரை முதலிய அரிய பல கருத்துக்களைக் கூறுவன. ஆயினும் அவற்றுள் வீரத்தைப் பற்றிய செய்யுட்கள் மிகுதியாக உள்ளன.

### அகமும் புறமும்

புறப்பொருட் செய்யுட்களில் அவற்றை இயற்றிய புலவர்களின் உணர்ச்சிகள், பெரும்பாலும் அப்புலவர்களே கூறுவனவாக வெளிப்படுகின்றன. அகப்பொருட் செய்யுட்களில்,புலவர்களின் உணர்ச்சிகள் உள்நின்று தலைவன் தலைவிமுதலாயோர் கூறுவனவாக வெளிப்படுகின்றன.

## இன்றைய பலன்

[20-1-68]

சனிக்கிழமை

தை மீ 6 உ

நட்சத்திரம்- உத்தரம் இரவு-12-51 மேல் அத்தம்.

திதி- பஞ்சமி இரவு 6-13 மேல் ஷஷ்டி.

சுபநேரம்- 3-35—5-05.

ராகுகாலம்- 9-35—11-05.

இன்று பிறந்தவர்களுக்கு:- கல்வி நலன், தொழில் பெருமை, வாகன விருத்தி ஆதியன இடம்பெறும். பேச்சாளர்கள் பெருமதிப்பைப் பெறுவர். அரசியல் வாதிகளுக்கு செல்வாக்குப் பெருகும். குடும்பத்தில் குழப்பத்தைத் தவிர்க்கவும். தூரதேசத்துச் செய்தியுண்டு

மேஷம்- தொழிலில் பொறுமை, அவதானம் வேண்டும்.

ரிஷபம்- பரம்பொருள் நினைப்பு, பரோபகாரம்.

மிதுனம்- வித்தை பலிதம், விருதும் கிடைக்கும்.

கடகம்- மக்களால் மேன்மை,மனதில் உற்சாகம்.

சிம்மம்- புதிர்போடும் மனம் தடுமாற்ற நிலை.

கன்னி- குமுறும் நெஞ்சம், குறைகேட்க நேரிடும்.

துலாம்- பணம் பத்தும் செய்யும், படாடோபமுண்டு

விருச்சிகம்- இரும்பு மனம் இருண்ட வாழ்வு.

தனுசு- நல்ல முடிவு, நன்மைகள் சேரும்.

மகரம்- கனிவான நினைவு, அன்பின் அழைப்பு.

கும்பம்- அன்னிய வாசம், அகாலபோசனம்.

மீனம்- குளிர்விடும் காதல், ஒளிவிடும்வாழ்வு.

திருமலை வேலுப்பிள்ளை [illegible]

## பிரிட்டிஷ்தூதர் யாழ். வருவர்

யாழ்ப்பாணம், சனி

இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் கைகமிஷனர் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்.

இவர் திருக்கோணமலையில் நடைபெறவிருக்கும் இலங்கையின்சுதந்திரதினவிழ வில்கலந்துகொள்வதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தின் முக்கிய இடங்களைப்பார்வையிடுவாரெனத் தெரிய வருகிறது. பிப்ரவரி 2-ம் திகதி யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் செல்வாரென்றும் அதன் பின்னர் 4ம் திகதி திருகோணமலையில் நடைபெறவிருக்கும் சுதந்திரதின விழாவில் கலந்து கொள்வாரென்றும் தெரிய வருகிறது. [விநி]

## கூட்டுறவுத் தொழிற்சங்க வருடாந்தக் கூட்டம்

உடுவில், வெள்ளி

யாழ்ப்பாணம் ஜி. பி. எஸ். தொழிலாளர் கூட்டுறவுத் தொழிற்சங்கத்தின் வருடாந்தக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தொழிலாளர் கூட்டுறவுக் காரியாலயப் பரிசோதகர் திரு. ரி. சண்முகராசா கூட்டத்தின்போது கூட்டுறவு முறையின் தொழிலாளர்களிடையே ஏற்படும் நன்மைகளையும், சிறந்த முறையில் கூட்டுறவைப் பரவைக்கும் தன்மையையும் தொழிலாளர்களுக்கு எடுத்துக்கூறி விளங்கவைத்தார்.

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் நிருவாகக் காரியதரிசி திரு. பொ. செல்வரத்தினம் கூட்டுறவு முறையால் தொழிலாளர் சாதிக்கக்கூடிய சாதனைகளை எடுத்துரைத்தார்.

கூட்ட முடிவில் பின்வருவோர் மேற்படி கூட்டுறவுத் தொழிலாளர் சங்கத்தின் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. சு. தில்லையம்பலம், உப-தலைவர் திரு. க. பரமு, காரியதரிசி: திரு. வே. இரத்தினம், தனாதிகாரி: திரு. வீ. இராசதுரை. நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## [க]ட்டிடவேலைகள் பூர்த்தி

உரும்பராய், வெள்ளி

அச்சுவேலியில் உள்ளூராட்சிஇலாகாவால்தொடக்கப்பட்ட வேலையாளர் குடியேற்றத்திட்டத்தில்கட்டிட வேலைகளின் முதற்கட்டமாகிய 54 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மற்றப் பகுதியான மிகுதி 5[...] வீடுகளுக்கும் விரைவில் வேலை ஆரம்பிக்கப்படும். வீடுகளுக்கு குடியிருக்க விண்ணப்பங்களை கோப்பாய் காரியாதிகாரி கேட்டுள்ளார்.

# உலகத்துக்கு புதி[...] காட்டிய மேதை

### நாளை அவர் நினைவ[...]

சோவியத் ரஷ்யாவின் அதிவேக வியப்புமிகு வளர்ச்சியைக் கண்ணுறும் போது அந்த வளர்ச்சிக்கு வித்திட்ட மறைந்த மாமேதை விளாடிமிர் லெனின் தான் நம் நினைவுக்கு வருகிறார்! புரட்சி மூலம் உலகிலேயே முதலாவது பொதுவுடைமைஆட்சியைசோவியத் ரஷ்யாவில் நிறுவி அந்நாட்டு மக்களுக்கு ஒளிமயமான வாழ்வுப்பாதையை 1917ல் செப்பனிட்டுக் கொடுத்த லெனின் என்ற ரஷ்யாவின் பிதாவை உலகத்துக்கு வழி காட்டிய பேரறிஞர் என உலாம் என்றும் மறக்கமாட்டாது

'வீரமும் நேர்மையும், துறவியின் வைராக்கியமும் கொண்டவர் லெனின். மனிதஜாதியின் இன்பத்துக்காக எலலாவித உலக சௌபாக்கியங்களையும் துறந்தஞானி' என்று ரஷ்ய அறிஞர் மாக்ஸிம் கார்க்கி லெனினைப்பற்றிச் சொல்லும் இந்த இரு வார்த்தைகளே அவர் தியாக வரலாற்றை அடக்கி விடுகிறது.

லெனினுடைய போரா[...]டம் வெற்றி பெற்றதற்[...] அவரிடமிருந்த தனித்த[...]மையே காரணம். மனிதர்[...]ளுடைய இருதயத்தை அவ[...] ஊடுருவி உணர்ந்து புரிந்[...] கொண்டார். ஒவ்வொரு[...]ருடைய உள்ளக் கிடக்[...]யும் ஊடுருவிக் காணக் கூ[...]யவராய் இருந்தார். இவை[...] தான் அவர் வெற்றிக்கு[...] காரணம் என்று கூட[...] சொல்லலாம்.

எப்பொழுதும் கலகல[...]போடு மனிதர்களை மனித[...]களாக மதித்து எளிமைய[...]கப் பழகினார். சாதாரண[...]மான தொழிலாளர்களு[...]னும், விவசாயிகளுடனு[...] அவர் இணைந்து பழகினார்[...] லெனினைப் போன்று மனி[...] தத்துவத்தைப் புரிந்[...] கொண்டவர்கள் இந்த உ[...]கில் யாருமே இல்லை. இ[...]ரது புரட்சி வெற்றி பெற்[...]தின் இரகசியமும் இதுவெ[...]ன்று கூறலாம்.

ஒய்வு என்பது லெனினி[...] அகராதியில், கிடையாது[...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

த்
ங்க
ட்டம்
வெள்ளி
ஜி. பி.
ர் கூட்டு
ங்கத்தின்
ம் நேற்று
பெற்றது.
ட்டுறவுக்
சோதகர்
ாசா கூட்
கூட்டுறவு
ழிலாளர்
டும் நன்
த முறை
ப் பரவ
மையையும்
கு எடுத்
வத்தார்.
ய மேற்
ன் நிரு
திரு
னம் கூட்
தொழி
டிய சாத
த்தார்.
பின்வரு
கூட்டுற
சங்கத்
உத்தி
தெரிவு
. தில்லை
-தலைவர்:
காரிய
. இரத்தி
திரு. வீ.
வாகசபை
ய்யப்பட்

லகள்

, வெள்ளி
டள்ளு
தொடக்
ளர் குடி
ல்கட்டிட
கட்டமா
ம் கட்டி
ன. மற்
ிகுதி 54
விரைவில்
கப்படும்.
ருக்கவிண்
காப்பாய்
கேட்டுள்

ஆசிரியருக்கு கடிதங்கள்

## பட்டின சபையும் சோலை வரியும்

உரும்பராய் பட்டினசபையின் சோலைவரி பற்றி உரும்பராய் பட்டினசபைத் தலைவருக்கு நான் எழுதிய கடிதத்தையே 'ஈழநாட்டு'க்கு அனுப்பியிருந்தேன். எனது அந்தக் கடிதத்திற்கு திரு. கனகசுந்தரம் விளக்கம் தெரிவித்திருந்தார்.

சட்டமுறைப்படி பழைய நீர்வேலி கிராமசபைக்கு வருமதியான வரி நிலுவைகளை மட்டிலுமே புதிய உரும்பராய் பட்டினசபை அறவிடமுடியும். பழைய நீர்வேலி சிராமசபை சட்டப்படி நடவடிக்கை எடுத்து அறவிடப் பின்நின்ற நிலுவைகளை தற்போதைய உரும்பராய் புதிய பட்டினசபை ஆராய்வின்றி அவசரப்பட்டு அறவிடுவதன் மூலம்எழக்கூடிய சட்ட நடவடிக்கைகளைத் தவிர்க்கும் நோக்கமாகவே எனது தாழ்மையான ஆலோசனையைத் தெரிவித்தேனே அல்லாது சட்டரீதியான சபையின் கருமங்களுக்குத் தடைவிதிக்கும் நோக்கமாக வல்ல.

சிறப்பான சேவைகளை அளிப்பதற்காகவே அமைச்சரின் விசேட அனுமதி பெற்று சோலைவரியை கிராமசபைகள் அறவிடுகின்றன. அதற்கு முன் அது பற்றிய தகவல் இலங்கை அரசாங்க வர்த்தமானப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்விதம் பழைய நீர்வேலி கிராமசபை செய்துள்ளதா என்பதும் அவதானிக்கப்பட வேண்டும். பட்டினசபை விரும்பினால் மேற்படி நிலுவைகளை அறவிடுவதில்லையென தீர்மானிக்கும் உரிமையும் அதற்கு உண்டா என்பதையும் ஆராய்ந்து பழைய நிலுவைகளிலிருந்து வரியிறுப்பாளர்களை அதுவும் குறிப்பாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள ஏழைமக்களைக் காக்க வழியுண்டா என்பதையும் பட்டினசபை ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

ந. அரியரத்தினம்
செயலாளர்,
தமிழரசு வாலிபமுன்னணி,
உரும்பராய் தெற்கு.

ஃ ஃ ஃ

### இதுவும் ஒரு சேவை

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பொருட்டு 18-1-67 காலை 5-30 மணிக்கே முல்லைத்தீவு இ. போ. ச. டிப்போவிற்குப் போய் காவல் நின்றேன். மணி 6 இருக்கும். டிப்போவில் இருந்த ஒரு உத்தியோகத்தர் சாரதி ஒருவரைப் பார்த்து 'பஸ்சை எடுத்துக் கொண்டு போகலாம்' என்றார். சாரதி பதிலாக ''நான் இந்த பஸ்சை யாழ்ப்பாணம் 90 மைலுக்குக் கொண்டு செல்ல மாட்டேன் காரணம் இந்த பஸ்சை 'ஒன் ரெஸ்ற்'மூலம் அனுப்ப வேண்டும்'' என்று கூறவே. நீர் கட்டாயமாகக் கொண்டு போகவேண்டும் என்று வற்புறுத்தினார் அந்த உத்தியோகத்தர் பின்பு சில மெக்கானிக்குகள் வந்து ஏதோ பஸ்சில் ஏறிப் பூட்டினார்கள் இதன் பின்பு பஸ் சாரதி உத்தியோகத்தரின் சொல்லை ஏற்று பஸ்சை எடுத்தார். ஆனால் பஸ்சின் எஞ்சின் வேலைசெய்ய மறுத்தது பின்பு ஒரு மெக்கானிக் ஓடிவந்து ஏதோ செய்தார், பின்பு பஸ் புறப்பட்டது புறப்படும் போது சாரதி ''கடவுளே காப்பாற்று'' என்று சொல்லி பஸ்சை ஓட்ட ஆரம்பித்தார் பிரயாணிகளில் ஒருவனாகிய என்னை தனது அருகாமையில் இருத்திக் கொண்டார் சாரதி. ஏன் என்றால் பழுதடைந்து திடீரெனப் பிடிக்க முடியாத பிறேக்கைப பிடிக்க! அப்பப்பா என்ன பாடு பட்டார் சாரதி. ஏதோ தன் திறமையினால் பஸ்சை ஓட்டிச்சென்றுசரியாக பகல் 11-40-க்கு யாழ்ப்பாணத்தில் சேர்த்தார்.

இது என்ன? பிரயாணிகள் எப்படி நம்பிப் பிரயாணம் செய்ய முடியும்.

சு. பொன்னுசுவாமி
முல்லைத்தீவு.

ஃ ஃ

### சொன்னது இதுதான்

17-1-68 திகதிய 'ஈழநாடு' பத்திரிகையில் 4-ம் பக்கத்தில பிரசுரமாகிய 'பாகுபாட்டை நீக்க உறுதி' என்ற தலையங்கத்தில் 'இதன்பின் பேசிய ஆனைக்கோட்டைக் கிராமசபைத்தலைவர் திரு சி. மார்க்கண்டு இக்குறையை வெகுவிரைவில் தீர்த்து வைப்பதாக உறுதிகூறினார்.' என்றிருப்பது போல் நான் அன்றைய கூட்டத்தில் பேசவில்லை. ஆனால் நான் பேசியது சுடலையிலுள்ள கிணற்றில் நீர் அள்ளுவதற்கு சிறுபான்மையினருக்கு உரிமை மறுக்கப்பட்டிருப்பதாக இதற்குமுன் ஒருபோதும் இப்படியான ஒரு முறைப்பாடு எனது கவனத்திற்கு கொண்டுவரவில்லை. அப்படியானதொரு பிரச்சினை இருப்பதாக நான் இதுவரை அறியவில்லை. அவ்வாறு ஏதாவது இருந்தால் அதைத் தீர்த்து வைப்பதற்கு ஆகவேண்டிய நடவடிக்கை எடுப்பேன்' என்பதாகும். அதுவுமன்றி இப்படி நடைமுறையிலிலலாததைக் கூறியிருப்பதாகக் கூறினால் பொதுமக்களின் அனுதாபம் குறைந்துவிடும் என்றும் கூறினேன்.

சி. மார்க்கண்டு

ஃ ஃ

### பொருத்தமற்றது

17 1-68 புதன்கிழமையன்றைய ஈழநாடு பத்திரிகையில் 'பாகுபாட்டை நீக்க உறுதி' என்னும் தலையங்கத்தைப் பார்த்தேன்.

இது முற்றிலும் பொருத்தமற்றது ஏனெனில் இந்த இடுகாட்டுக் கிணற்றில் தாழ்த்தப்பட்ட இனமக்களாகிய நாம் தண்ணீர் அள்ளுவதற்கு வேறெந்தச் சமூக மக்களும் இதுவரை எதிர்ப்புக் காட்டவில்லை ஆனல் நாம் அக்கிணற்றில் தண்ணீர் அள்ளி எமது உரிமையை பாதுகாக்காமல் விடுத்தது எமது சமூக மக்களின் தவறாகும்.

[illegible]
[illegible] தொழிற்சங்க காரியதரிசி

வல்வெட்டித்துறையில்

## 3 தரிப்பு நிலையங்களிலும் பஸ்கள் இனி நிற்கும்

வல்வெட்டித்துறை, வெள்ளி

இன்றுகாலை வல்வெட்டித்துறை பட்டினசபை முன்பாக வல்வெட்டித்துறையில் புதிதாகத் தொடங்கப்பட்ட புதிய பஸ் நிலையம் சம்பந்தமாக கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பருத்தித்துறை பஸ் டிப்போ சுப்ரீண்டன் பாலசுப்பிரமணியம் அவரது உதவியாளர் பட்டினசபை அங்கத்தவர் சிலர் உப தலைவர் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர். அவர்களுடன் பொதுமக்களில் வடமாகாண பஸ் பிரயாணிகள் காரியதரிசி திரு. ரி வேலுப்பிள்ளை ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

வல்வெட்டித்துறையிலுள்ள பொதுபஸ்நிலையம் 15-1-68 லிருந்து இயங்கிக் கொண்டிருக்கிறது இதற்கு முன்பு பருத்தித்துறை, காங்கேசன் துறை உடுப்பிட்டி ஆகிய வீதிகளில் அண்மையில் மூன்று பஸ் தரிப்பு நிலையங்கள் இருந்து வந்தன. இம்மூன்று பஸ்தரிப்பு நிலையங்களிலும 15-1-68க்குபின் சில பஸ்கள் நிற்காமல் வந்து நின்றதைத் தொடர்த்து இக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. இ. போ. ச பையைச் சேர்ந்த பருத்தித்துறை முகாமையாளர் பட்டினசபைக்கு 16-1-68ல் எழுதிய கடிதத்தில் அண்மையிலுள்ள பஸ் தரிப்பு நிலையங்களை அகற்றி விடுவதற்கு பட்டினசபை நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற கடிதம் பற்றியும் பிரஸ்தாபிக்கப் பட்டதாம்.

டிப்போ சுப்ரீண்டன், பட்டினசபைத் தலைவர் திரு. எம். இரத்தினவடிவேல் அங்கத்தவர்கள் பிரயாணிகள் சங்க காரியதரிசி பொதுமக்கள் ஆகியோர் முன்னிலையில் இம் மூன்று பஸ் தரிப்பு நிலையங்களிலும்தொடர்ந்து சகல பஸ்களும் தரித்துப் போகவேண்டும் என்ற உடன் படிக்கை மேற்கொள்ளப்பட்டது. பொதுமக்களின் அபிபிராயத்தை அறிந்து சில சிறு மாற்றங்களை காலாகாலத்தில் ஏற்படுத்திக் கொள்ளலாமெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

—

### அனலைதீவு மாணவரின் சாதனை

அனலைதீவு, வெள்ளி

அனலைதீவு தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலிருந்து அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழ் ஆசிரியர் சங்கத்தினரால நடாத்தப்பட்ட 5-ம் வகுப்புப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் அனைவரும் சித்தியடைந்துள்ளனர். மற்றய 3-ம்வகுப்பு, 4-ம் வகுப்புப் பரீட்சைகளில் முறையே 85 வீத மாணவர்களும், 95 வீத மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர். 3-ம் வகுப்புப் பரீட்சை தீவுப்பகுதி தமிழாசிரியர் சங்கத்தினாலும், 4-ம் வகுப்புப் பரீட்சை ஊர்காவற்றுறை வட்டாரப் பரீட்சையினராலும் நடாத்தப்பட்டது.

—

### விவசாயப் பயிற்சி வகுப்பு

அராலி, வெள்ளி

கூட்டுறவு நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர், நிர்வாக உறுப்பினருக்குக் கூட்டுறவுத் திணைக்களம், கூட்டுறவு விதிகள், சங்கங்களின் உப-விதிகள் பற்றி காலத்திற்குக்காலம் பயிற்சி வகுப்புகள் வட்டார ரீதியில நடத்திவருவதுபோல, கமத்தொழில் திணைக்களம் கிராமங்கள் தோறும் நிறுவப்பட்டிருக்கும் பயிர்ச்செய்கைக் குழு உறுப்பினருக்கு நெற்காணிச் சட்டம் பற்றிப் பயிற்சி வகுப்புகள் நடாத்தத் தீர்மானித்துள்ளது. வலிகாமம் மேற்குப் பயிர்ச்செய்கைக் குழுக்களின் உறுப்பினருக்கு இவ் வகுப்பு சித்தங்கேணி கணேச வித்தியாசாலையில் இம்மாதம் 28ந் தேதி காலை 9-00மணி தொடக்கம் மாலை 5-00 மணிவரை நடாத்த கமத்தொழிற்பகுதி உதவி ஆணையாளர் ஒழுங்குசெய்துள்ளார்.

—

### நிவாரணம் வழங்கப்பட்டது

வல்வெட்டித்துறைவெள்ளி

வடமராட்சிக் குட்பட்ட தொண்டமனாற்று பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவர்களதுசேதத்திற்கேற்ப ரூ. 150, ரூ. 120, ரூ 80 என நிவாரப்பணம் வழங்கப்பட்டது.

கிராமசேவையாளர் திரு வி ஜெயவீரசிங்கத்தின் உதவியுடன் சமூகசேவைப் பகுதியினர் இப்பணத்தை வழங்கினர். நிவாரணம் வழங்கப்பட்டபோது பருத்தித்துறை எம். பி. திரு கே. துரைரத்தினமும் சமூகமளித்திருந்தார்.

—

### நம்பிக்கையில்லாப் பிரேரணை

நல்லூர், வெள்ளி

தெல்லிப்பழை கிராம சபைத் தலைவர் திரு. தம்பு செல்வரத்தினம் மீது 15 அங்கத்தவர்களால் கைச்சாத்திடப்பட்டு, உள்ளூராட்சி உதவி ஆணையளருக்கு அனுப்பிவைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை இம்மாதம் 23ந் திகதி நடைபெறவிருக்கும் விசேஷ கூட்டத்தில் பரிசிலனை செய்யப்படவிருக்கிறது.

19 அங்கத்தவர்கள் இக் கிராமசபையில் அங்கம் வகிக்கிறார்கள்.

## புதியபாதை [illegible]த லெனின் [illegible]னைவு தினம்

போராட்
பற்றதற்கு
தனித்தன்
மனிதர்க
தை அவர்
து புரிந்து
வொருவ
கிடக்கை
ணக் கூடி
ர். இவை
வற்றிக்குக்
று கூடச்

கலகலப்
ா மனிதர்
ளிமையா
சாதாரண
ளர்களுட
களுடனும்
பழகினர்.
று மனித
புரிந்து
இந்த உல
லை. இவ
றி பெற்ற
இதுவெ

லெனினின்
டையாது

என்றுமே போராட்டத்துக்கு தயாராக இருந்தார். பட்டினியும் அவருக்கு நண்பர் கையிலே ஒருகாசுகூட இல்லாமல் வாழ்க்கையை நடத்தியிருக்கிறார். கட்சியிலிருந்து அவர் நினைத்திருந்தால் காசு எடுத்திருக்கலாம் ஆனால் தனது தேவைக்காக ஒரு காசு கூட அவர் எடுத்தறியார்.

கட்சி, கொள்கை இவைகளுடன் ஊறி இரண்டறக் கலந்து வாழ்ந்தவர்லெனின் தேவையில்லாமல் அர்த்தமில்லாமல் யாருடனும் ஒரு விநாடியைக்கூடச் செலவு செய்யமாட்டார்.

லெனின் மக்களுக்குப் போதித்தவற்றை செயலிலும் காட்டினர். மது அருந்த மாட்டார், புகைக்க மாட்டார், அவரிடம் சிறந்தபல பண்புகள் இருந்தன

மனித இதயங்கள் வாழும் வரை மாமேதை லெனினும் வாழ்வார்!

—பாமா

### நாடும் நடப்பும்

இலங்கை ஓர் அழகான தீவு. இதை வெளிநாட்டார் பலர் வந்து சுற்றிப் பார்த்துவிட்டுப் புகழ்ந்து கூறுகிறார்கள். இலங்கையில் பிறந்து வளர்ந்து, வாழும் நயமில் எத்தனை பேர் இலங்கை முழுவதையும் சுற்றிப்பார்த்து அனுபவித்திருக்கிறோம்?

'நம்பிக்கையூட்டும் இலங்கைத்தீவு' என்ற தலைப்பில் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தகவல் இலாகாவினர் தயாரித்த வர்ணப்படமொன்றை சென்ற பதின்மூன்றும் திகதி யாழ்ப்பாணம் பொது நூல்நிலையக் கட்டிடத்தின் மேல் மாடியிலுள்ள அமெரிக்க நூல்நிலையப் பிரிவில் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. தென்னந்தோட்டம், தேயிலைத் தோட்டம், பராக்கிரமபாகு மன்னர் கட்டிய நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுக்கள், வயல்கள், வாவிகள் இத்தனையையும் அழகான வர்ணங்களில் திரைப்படமாக்கியிருக்கின்றனர். சிரமதானக் காட்சிகளையும் கண்டேன். இலங்கை அழகான தீவுதான். இந்தப் படத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களையும் கொஞ்சம் சேர்த்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

இலங்கை முழுவதையும் வசதி குறைந்த மக்களும் சுற்றிப் பார்த்து அனுபவிக்கக்கூடிய வாய்ப்பை இலங்கை ரயில்வேயும் இலங்கைப் போக்குவரத்துச் சபையும் இணைந்து சுற்றுலாத்திட்டம் ஒன்று தயாரித்து செயல்படுத்தினால் என்ன? மலிவுக்கட்டணம் வகுத்து வருடத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்திலாவது சுற்றுலாப் பிரயாணத்துக்கு வசதிசெய்தால் சமூக ஒற்றுமையைக்கூட நிலைநாட்ட வழிபிறக்கும். இலங்கை ரயில்வேயும், இ. போ. சபையும் இச்சேவையைச்செய்ய முன்வந்தால் நல்லது.

அன்றைய திரைப்படக் காட்சியில் விண்வெளிச் சந்திப்பு பற்றிய ஒரு படமும் காட்டப்பட்டது. இரு விண்வெளிக்கலங்கள விண்வெளியில் சந்திக்கும் காட்சியையும், விண்வெளிக் கலங்கள் விண்வெளிக்கு அனுப்பப்படும் காட்சியையும் பல வர்ணங்களில் கண்டேன். அப்பப்பா, அசுர சாதனைதான்!

வியட்னாமில் அந்த மக்கள் தமது வாழ்க்கையைச் சீராக்க நடத்தும் போராட்டமும் ஒரு படத்தில் காட்டப்பட்டது 'நியுயோர்க் டைம்ஸ்' என்ற பத்திரிகை எப்படி ஆரம்பிக்கப்பட்டது அது எப்படி உலகிலிருந்து செய்திகளைத் திரட்டி வெளியிடுகிறது என்பதை மற்றொரு படம் எடுத்துக்காட்டியது

இந்தப் படங்களைப் பார்த்தபோது நமது நாடு எங்கே நிற்கிறதென்ற எண்ணம் தான் ஏற்பட்டது. இப்படி ஒரு சந்தர்ப்பத்தை அளித்த இளைஞர் பாலச்சந்திரனைப் பாராட்டவேண்டும்.

— ஊர்சுற்றி.

### தற்காலிக வேலைநீக்கம்

நல்லூர், வெள்ளி

யாழ்ப்பாணம் தபால்கந்தோரைச் சேர்ந்த தபால் சேவகர் ஒருவர் நேற்றிலிருந்து தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கம்செய்யப்பட்டுள்ளார். வெளிநாடொன்றுக்கு அனுப்பப்பட்ட தபாலொன்றின் முத்திரையைத் திருடமுயன்றதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. தபால்பகுதி விசாரணையை மேற்கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# " தமிழ் இலக்கிய சிறப்புகளை உலக பேரறிஞர்கள் அள்ளிச் சென்றனர் "

## உலகத் தமிழ் மகாநாடு பற்றி மட்டுநகர் எம். பி. இராசதுரை

அளவெட்டி, வெள்ளி

"உலக பேரறிஞர்கள் தமிழ் இலக்கியப் பண்பாட்டுச் சிறப்புகளை அள்ளிக் கொண்டு செல்லும் வகையில் மகநாடு அமைந்திருந்தது"

சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் கலந்துகொண்டு நேற்று விமானமூலம் பலாலிவிமான நிலையத்தை வந்தடைந்த மட்டக்களப்பு முதல் எம். பி. யும், மேயருமான திரு. செ. இராசதுரை மகாநாடு பற்றிய தமது கருத்தைத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

மட்டக்களப்பு எம். பி. நமது நிருபரிடம் மேலும் கூறியதாவது:- "தமிழின் பெருமையைத் தமிழ் மக்கள் அறியமுன் மேல்நாட்டு அறிஞர்கள் அறிந்து அதன் பெருமையையும் சிறப்பையும் பாராட்டினர்கள். தமிழர்கள் தாய்மொழியை மறந்தாலும் மேல்நாட்டு அறிஞர்கள் தமிழின் பெருமையை, தமிழ்மொழியின் சிறப்பை ஆங்கில மொழி மொழியில் அறிந்தார்கள்,

இச்சிறந்த விழாவை இதுவரை தமிழகம் காணவில்லை தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் ஒரே தமிழ் ஆர்வமும், எவர்களிடத்தும்தமிழ் உணர்வும் காணப்பட்டன. தமிழ்நாடுமுழுவதுமேதமிழ் திருவிழாக் கோலம் பூண்டிருந்தது."

### சமயதீட்சை

புன்னாலைக்கட்டுவன்வெள்ளி

தைப்பூசத் தினத்தன்று இப்பகுதியிலுள்ள உரும்பராய் இந்துக்கல்லூரி மற்றும் பாடசாலைகளில் மாணவருக்குத் தீட்சை கொடுப்பதற்கான ஒழுங்குகள் நடைபெற்றுவருகின்றன.

### கவுட்டமாலா....

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

காப்பாளரும் அதேவிதமாகக் கொல்லப்பட்டதும் வாசகர்கள் அறிந்ததே.

### 1000 பேர் கொல்லப்பட்டனர்

கவுட்டமாலாவில் கடந்த 18மாதங்களாக இடதுசாரி-வலதுசாரித் தீவிரவாதிகளுக்கிடையே நடைபெற்ற மோதல்களில் 1000 பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. சில வட்டாரங்கள், கொல்லப்பட்டோர் அல்லது காயப்பட்டோர் தொகையை 4000 எனக் கணித்துள்ளன.

### தலைமை ஆசிரியர் மகாநாடு

அச்சுவேலி வெள்ளி

வலிகாமம் கிழக்கு தலைமை ஆசிரியர் சங்க மகாநாடு சென்ற 13-ம் திகதி வித்தியாதிகாரி திரு. கே. நவரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது 6-ம் வகுப்பு நேரசூசி, பாடசாலைகளுக்குரிய உபகரணம், புதுவருட வேலை விபரங்கள் ஆகிய விஷயங்கள் ஆராயப்பட்டன. மூன்றும், நான்காம் வகுப்புகளின் தரத்தை உயர்த்தவேண்டுமென்றும் இம்மகாநாட்டில் கருத்து தெரிவிக்கப்பட்டது.



### ஆசிரியர் பற்றாக்குறை

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் ஆறுமுக வித்தியாசாலை ஆசிரியர்பற்றாக்குறை இன்னமும் தீர்க்கப்படவில்லை. தமது பிள்ளைகளின் கல்வி நிலை குறித்து பெற்றோர் பெரிதும் கவலையும் அவதியுமடைந்துள்ளனர்.

இதுசம்பந்தமாக பாடசாலையாசிரியர்கள், பெற்றோர்கள் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கத்திடம் ஆசிரியர் பற்றாக்குறை பற்றி புகார் தெரிவித்தனர். உடன் நடவடிக்கை எடுக்கும்படி வேண்டிக் கொண்டனர்.

### மொரோக்கோ மந்திரிசபை

ரபாட், ஜன. 19

மொரோக்கோ மந்திரி சபையில் பலமுக்கிய மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளனதாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜப்பானில் அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல் வருகையை எதிர்த்து பலத்த ஆர்ப்பாட்டம்

டோக்கியோ, ஜன. 19

அமெரிக்காவின் பெரிய விமானந்தாங்கிக் கப்பலான 'எண்டர் பிரைஸ்' ஜப்பான் வந்து சேர்ந்துள்ளது இதையொட்டி, அங்கு பொலிஸாருக்கும், இடதுசாரி மாணவர்கள் உட்பட ஏறத்தாழ 30,000 மக்களுக்குமிடையே சுமார் இரண்டு மணி நேரம் கைகலப்பு ஏற்பட்டது பலர் காயமுற்றனர். இன்னும் பலர் கைதுசெய்யப்பட்டனர்.

கப்பல் வருவதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த மக்களுக்கும்பொலிஸாருக்குமிடையே, ஜப்பானில் அமெரிக்கக் கடற்படைத்தளமிருக்கும் இடமான சஸேபுவுக்குச்செல்லும் ஒரு பாலத்தின்மீது இக்கைகலப்பு நடந்தது.

### தேயிலை சுத்திகரிப்பு இயந்திரம்

லண்டன், ஜன. 19

நவீன ரகமான தேயிலை சுத்திகரிப்பு இயந்திரமொன்று பிரிட்டனில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரம் தன்னியக்கமாக தூய்மையான தேயிலையை கழிவுகளிலிருந்து பிரித்தெடுக்கிறது. மின்சத்தியால் இயங்கும் இவ்வியந்திரம் சுத்தமான தேயிலையிலுள்ள சரத்தன்மை மற்றும் கழிவுப் பொருட்களான தேயிலைக் காம்புகள், இலைத் தண்டுகள் போன்றவற்றை பிரித்தெடுக்கும் ஆற்றல் மிக்கது.

### அந்தஸ்து உயர்வதில் அபிப்பிராய பேதம்

காங்கேசன்துறை, வெள்ளி

காங்கேசன்துறை பட்டின சபை நகரசபை அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டால் தாம் தமது பதவியை ராஜினமாச் செய்யப் போவதாக இரு அங்கத்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

காங்கேசன்துறையைநகர சபை அந்தஸ்துக்கு உயர்த்துவதற்கு தனிநபர் கமிஷன் ஆதரவு தெரிவித்து சிபார்சு செய்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே வி செல்வநாயகம், காங்கேசன்துறை பட்டினசபையில் உள்ள 6 அங்கத்தவர்களில் ஐவர் காங்கேசன்துறை நகரசபையாவதை எதிர்த்து கமிஷன் முன் சாட்சியமளித்திருந்தது தெரிந்ததே.

### சுற்றுநிருபத்துக்கு அதிபர்கள் பதில்

புன்னாலைக்கட்டுவன், வெள்ளி

6ம், 7ம்வகுப்புகளில் பட்டதாரி ஆசிரியர்கள் கற்பிக்கக்கூடாதென்றும், இவ்வகுப்புகளில் பயிற்றப்பட்ட ஆசிரியரே படிப்பிக்க வேண்டுமென்றும்கோப்பாய் வட்டார வித்தியாதரிசி திரு. கே. நவரத்தினம் ஒரு சுற்றறிக்கை விடுத்துள்ளார். ஆனல் ஆசிரியர் இடமாற்றக் குழப்பநிலையில் இது சாத்தியமல்லவென்று சில அதிபர்கள் அவருக்கு அறிவித்துள்ளனர்.

## 9 இலங்கையருக்கு சாம்ராஜ்ய உபகாரநிதி

லண்டன் ஜன. 19

பிரிட்டிஷ் சாம்ராஜ்ய உபகார நிதி கமிஷன் இவ்வாண்டு 219 பேர்களுக்கு உபகார நிதி வழங்கியுள்ளது. இவர்களில் 9 பேர் இலங்கையர்களாவர்.

சாம்ராஜ்ய சர்வகலாசாலைகள் சங்கம் சமீபத்தில் லண்டனில் வெளியிட்டுள்ள தனது வருடாந்த அறிக்கையில் இவ்விபரங்களைக் கொடுத்துள்ளது ஏற்கனவே பிரிட்டனில் 334 கல்விமான்கள சாம்ராஜ்ய உபகார நிதி பெற்று பயின்று வருகிறார்கள். இப்புதிய தொகையினருடன், மொத்தம் 553பேர் தற்சமயம்பிரிட்டனில் உயர்கல்வி பயில்வதாக இந்த அறிக்கை கூறுகிறது.

நான்கு புது ரகமான வைத்திய உபகார நிதிகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. சாம்ராஜ்ய நாடுகளைச் சேர்ந்த வைத்திய கல்விமான்களுக்கு பிரிட்டனில் பயிற்சிபெறும்வாய்ப்பளிக்க இந்தப் புதிய உபகாரத் திட்டம் வழிவகுக்கிறதென்றும், இவர்கள் தத்தம் நாடுகளில் வைத்திய போதன கல்வியின் அபிவிருத்தியில் அதிகப் பங்கு கொண்டு உழைக்க இத்திட்டம் உதவியாக இருக்குமென்றும் இவ்வறிக்கை கூறுகிறது.

இது இவ்வாறிருக்க சாம்ராஜ்ய சர்வகலாசாலைகள் தொகை அதிகரித்துவருவதாக இவ்வறிக்கை கூறுகிறது. கடந்த ஆண்டு இறுதியில் மொத்தம் 178 சர்வகலாசாலைகள் இந்த சங்கத்தில் அங்கத்துவம் பெற்றிருந்தன. சாம்ராஜ்ய நாடுகளில் புதிதாகத் தோன்றியுள்ள சர்வகலாசாலைகள் இந்தச்சங்கத்தில் அங்கத்தவர்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதுகுறிப்பிடத்தக்கது. இவற்றில் பெரும்பாலானவை ஆசிய சர்வகலாசாலைகளாகும். இலங்கையிலுள்ள வித்தியாலங்கார வித்தியோதய சர்வகலாசாலைகளும் இச்சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ளன.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியருக்கு ஆயிரம் ரூபாய்

### கல்வித் திணைக்களம்கடனுகை வழங்கும்

புன்னாலைக்கட்டுவன், வெள்ளி

அண்மையில் நடைபெற்ற வெள்ளப்பெருக்குக் காரணமாகப் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு கல்வித் திணைக்களம் ஆயிரம் ரூபாவரை நஷ்டஈடு வழங்கத் தீர்மானித்துள்ளது. ஆனல் இக்கடன் பணம் 24 தவணைகளில் ஆசிரியர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்படுமென்றும், இந்நடவடிக்கைகளைச் சில வேளைகளில் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர் பார்வையிடக்கூடுமென்றும் தெரிகிறது. பல ஆசிரியர்கள் இக்கடனைப் பெறுவதற்கு மனுச்செய்கின்றனர்.

## பொது அறிவும் உள்ளூர் அறிவும்

வினுக்கள்

1. பர்மாவின் புரட்சிச் சபைத் தலைவர் [Chairman of Reveloutionary Council] யார்?
2. இலங்கை வர்த்தக கப்பற் சேவை அதிபதி [Director of Merchant Shipping] யார்?
3. பிரித்தானிய பொதுநல நடுகள் காரியதரிசி [British Commonwelth Secretary] யார்?
4. நம் நாட்டு உணவுக் கட்டுப்பாட்டதிகாரி Food Controller] யார்?
5. ஐக்கிய அமெரிக்காவின் [U. S] உபஜனதிபதி யார்?
6. மக்கள் சீனக் குடியரசின் [People's Republie of China] யார்?
7. நம் நாட்டு கைலஞ்ச ஆணையாளர் [Bribery Commissioner] யார்?
8. துறைமுக சரக்கு கூட்டுத்தாபன [P. C. C.] பொதுமுகாமையாளர் [G M] யார்?
9. பொதுமராமத்து திணைக்கள அதிபதி [D. P. W] யார்?
10. உலகின் இரண்டாவதுநீளமான [Second Longest] நதி எது?
11. அதிபாரக் குத்துச்சண்டை [Havy Weight Boxing]க்கு என்ன நிறைக்கு மேற்பட்டோர் அனுமதிக்கப்படுவர்?
12. நயாகரா நீர்வீழ்ச்சி [Niagara falls இன் உயரம் என்ன?
13. தேயிலை ஆய்வு நிலையம் [T. R. I] எங்கே அமைந்துள்ளது?
14. சர் பிராங் வொறல் [Sir Frank Worrell] எத்துறையில் பிரசித்தபெற்றவர்?
15. விடுதலைகள் எவ்வமைச்சினுல் பிரகடனப்படுத்தப்படுகிறது?

(விடைகள்: 7-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பான் 'பாட்மின்டன்' போட்டியில் யாழ்ப்பாணமும் பங்குபற்றும்

யாழ்ப்பாணம், சனி

டோக்கியோவில் நடைபெறவிருக்கும் பாடசாலை மாணவ மாணவிகளுக்கிடையேயான ஆசியபாடசாலைகள் பாட்மின்டன் சாம்பியன் போட்டியில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்தும் சிலர் தெரிவுசெய்யப்படவிருப்பதாகத் தெரிகிறது

இதற்கு முதற்படியாக யாழ்ப்பாணத்திலிருந்தும் பாடசாலை வீரர்களையும் வீராங்கனைகளையும் தெரிவு செய்வதற்கான பயிற்சிப் போட்டிகள் இம்மாதக்கடைசியில் வண்ணார்பண்ணை கில்னர் கட்டிட மண்டபத்தில் நடைபெறவுள்ளன. இலங்கை பாட்மின்டன் சங்கத்தின் ஆதரவில் நாடு பூராவும் உள்ள பாடசாலைகளிலிருந்தும் திறமையான ஆட்டக்காரர்கள் தெரிவு செய்யப்பட்டு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் ரோக்கியோ செல்லவுள்ளனர்

இந்த ஆசிய போட்டியில் இலங்கையும் கலந்துகொள்வதற்காக இலங்கை பாட்மின்டன் சங்கம் இடத்துக்கிடமிருந்து திறம் ஆட்டக்காரர்களை தெரிவுசெய்வதற்காக இலங்கை பாட்மின்டன் கோஷ்டியிலிருந்து தலை சிறந்த ஆட்டக்காரர்களை பயிற்சியாளர்களாகவும் தெரிவு செய்வோர்களாகவும் நியமித்துள்ளது.

யாழ்ப்பாண பாடசாலைகளிலிருந்தும் சிறந்த பாடசாலை 'பாட்மின்டன்' ஆட்டக்காரர்களை தெரிவு செய்வதற்காக இலங்கை பாட்மின்டன் சங்கத்தினால் நியமிக்கப்பட்ட திரு. என். இராசலிங்கம் யாழ்ப்பாணம் வருவார்.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, சென் பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, பரிசுத்த கன்னியர் மடப் பாடசாலை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகள் இத் தெரிவில் பங்குபற்றும்

[வி. நி]

## புதிய நிர்வாகிகள்

சாவகச்சேரி, வெள்ளி

தனங்கிழப்பு மணற்காடு சன சமூக நிலையத்தின் வருடாந்தக் கூட்டம் சன சமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகதெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வே. இரத்தினம், உபதலைவர்: திரு. இ. சட்டநாதர், காரியதரிசி: திரு. சபா. நாகராஜன், உபகாரியதரிசி: திரு ச. சண்முமம், தனாதிகாரி: திரு. நா. சண்முகம், உபதனாதிகாரி: திரு பொ. அருளம்பலம் மேலும் ஆறுபேரடங்கியநிர்வாகசபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## தீ மூட்டி எரித்தாராம் 9 மாதசிறை

சாவகச்சேரி, வெள்ளி

சாவகச்சேரியை அடுத்துள்ள நாவற்காடுஎன்னுமிடத்தில் அமைக்கப்பட்டிருந்த வாசிகசாலையை சென்றவருடம் ஆகஸ்ட் 10-ம் திகதி கணபதி சின்னத்தம்பிஎன்பவர் தீமூட்டி எரித்ததாவும் அதனால வாசிகசாலை நிர்வாகஸ்தர்களுக்கு நூறுரூபாய் நஷ்டம் விளைவித்ததாகவும் சாவகச்சேரிபொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா விசாரணை செய்தார்.

விசாரணை முடிவில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டமாஜிஸ்திரேட் எதிரி முன்பும் இருதடவை நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டதின் மேல் 9மாதச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்து அப்பீல் எடுக்க விரும்பின் ரூபா ஆயிரம் பிணையில் செல்ல அனுமதியளித்தார்.

## உதைபந்தாட்டம்

# குருநகர் கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம, சனி

விளையாட்டமைச்சின் ஆதரவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யாழ்ப்பாணக்காரியாதிகாரி பிரிவுக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் குருநகர் ஆரோக்கியநாதர் சனசமூக நிலையத்துக்கும் நீராவியடி வண்-வடக்கு சனசமூக நிலையத்துக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட மோதலில் குருநகர் கோஷ்டி நீராவியடிக் கோஷ்டியை 6—2 கோல்களால் தோற்கடித்தது.

ஆரம்பத்திலிருந்து முடிவுவரை விறுவிறுப்பாகக் காணப்பட்ட இப்போட்டியில் இடைவேளைக்கு முன்னர் குருநகர் கோஷ்டியில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது, முன்னணி வீரர்களின் பாசிங் ஆட்டமும் மின்னல் வெட்டுக்களும் எதிர் கோஷ்டி வீரர்களை திணறடித்துக் கொண்டிருந்தது எனினும் நீராவியடி விட்டுக்கொடுக்காமல் இயன்றவரையும் எதிர்த்து மோதிக் கொண்டிருந்தது.

இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் நீராவியடிக் கோஷ்டியினர் 2 கோல்கள் பெற்றிருக்கத் தக்கதாக குருநகர் கோஷ்டியினர் 4 கோலகள் பெற்றிருந்தனர்.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. இச்சந்தர்ப்பத்தில் நீராவியடிக் கோஷ்டியினர் ஒரு புதிய உற்சாகத்துடன் கடுமையாக மோதினர். எதிர்க்கோஷ்டியின் அதிகமான கோலடிக்கும் முயற்சிகளை அதிரடிகள் போட்டு அற்புதமாக முறியடித்துக்கொண்டிருந்தனர். இதனால் இவர்கள் மேலும் ஒரு கோலைப் பெற்றனர். எனினும் குருநகர் மேலும் இரு கோல்களை அடுத்தடுத்து விளாசியது. இப்போட்டிக்கு திரு. கோபால் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

### வெற்றிதோல்வி இல்லை

பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்கத்திற்கும் நாவாந்துறை சென். மேரிஸ் கோஷ்டிக்குமிடையே மற்றொரு உதைபந்தாட்டப் பலப்பரீட்சையில் இருசாராரும் விட்டுக்கொடுக்காமல் கடுமையாக ஆடிய காரணத்தால் ஆட்டம் முடிவில் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஒவ்வொருகோஷ்டியினரும் இவ்விருகோல்கள் போட்டிருந்தனர்,

இப்போட்டிக்கு திரு. கோபால் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

[வி. நி]

### கட்டுவன் வெற்றி

அளவெட்டி, வெள்ளி

கட்டுவன் ஞானோதயா விளையாட்டுக் கழகம் நடாத்தும் மூன்றாவது வருடாந்த பொன்னம்பலம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி 1ம் பிரிவில் கட்டுவன் ஞானோதயா விளையாட்டுக் கழகமும் குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகமும் மோதியதில் கட்டுவன் கோஷ்டி 8 மேலதிக கோல்களால் வெற்றியீட்டியது.

இறுதியில் கட்டுவன் கோஷ்டியினர் 10-2 கோல்களால் வெற்றியீட்டினர். இப்போட்டிக்கு திரு. சச்சிதானந்தம் நடுவராகக் கடமையாற்றினார்,

இச் சுற்றுப் போட்டியின் அமைப்பின் கீழ் 2ம் பிரிவில் குப்பிளான் ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகமும் மோதின.

கரசாரமாக நடைபெற்ற இப்போட்டியில் குப்பிளான் 'ஸ்ரார்' விளையாட்டுக் கழகமும் 3-0 கோல்களால் எதிர்க் கோஷ்டியை வென்றது. இப்போட்டிக்கு திரு. இராசரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

### அளவெட்டி வெற்றி

அளவெட்டி, வெள்ளி

இணுவில் விளையாட்டுக் கழகத்திற்கும் அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் அளவெட்டி வென்றது.

காரசாரமாகவும், விறுவிறுப்பாகவும் நடைபெற்ற இப்போட்டியில் அளவெட்டி கோஷ்யினர் 3—1 கோல்களால் வெற்றியீட்டினர். இப்போட்டிக்கு திரு. சி. பாலசந்திரன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகத்துக்கும் மல்லாகம் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் நடைபெற்ற மற்றொரு போட்டியில், அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் 2—0 கோல்களால்வெற்றியீட்டியது. திரு. ச. செல்லத்துரை இப்போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார்.

இவ்விரு போட்டிகளும் அளவெட்டி வொலீனிப் புலம் விளையாட்டரங்கில் நடைபெற்றன.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

**சனி 20-1-68**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் விருப்பம்.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கதம்ப இசை.

இரவு 6-15 குதூகலம், 6-45 பா வளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 பேச்சு, 7-45 வாத்திய இசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைச் சித்திரம், 10 00 நேயர் விருப்பம்.

## புதிய உறுப்பினர்

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. சி. நடராசா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்ட முடிவில் நடைபெற்ற புதிய நிர்வாகசபைத் தெரிவில் பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. சி. நடராசா, இணைத்தலைவர்கள்: திருவாளர்கள்: க. சண்முகலிங்கம், பி. க. வேந்திரமூர்த்தி, காரியதரிசி: திரு. பொ. புண்ணியசிங்கம், இணைக்காரியதரிசிகள்: திரு. சு யோகராசா, திரு. இ. திலகராசா, அங்கத்தவர்கள்: திரு இ செல்வமாணிக்கராசா, திரு சு. திருநீலகண்டன், திரு. வே. பத்மநாதன், திரு. இ. பரமநாதன், திரு. ஆ. சண்முகலிங்கம் திரு. கு நவரெட்னம், விளையாட்டுக்காரியதரிசி: திரு துரைராசா, கலைக்காரியதரிசி: திரு. செ. கனகராசா, நிலையப்பொறுப்பாளர்: திரு. செ. சின்னத்துரை. (வி. நி)

## ஆலய பரிபாலன சபை

அராலி, வெள்ளி

அராலி தெற்கு தரணன் முருகமூர்த்தி ஆலய வழிபாட்டாரின் பொதுக் கூட்டம் சென்ற திங்கட்கிழமை ஆலய மண்டபத்தில் கூடி ஆலய திருப்பணி வேலைகள் பூஜை ஒழுங்குகள் பற்றி ஆலோசித்தனர்.

பின் வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. வே. சிதம்பரப்பிள்ளை, உப-தலைவர் திரு. வே. ஆறுமுகம், காரியதரிசி திரு. சு. கந்தசாமி, தனாதிகாரி திரு இ. கந்தமுத்து. பரிபாலனச் சபை உறுப்பினர்களாக திருவாளர்கள் மு. குமாரவேலு, கி, கந்தையா, மு. மார்க்கண்டு. வே. சிதம்பரநாதன், தே. வரதராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். ஸ்ரீலஸ்ரீ க கணேசக்குருக்கள் மீண்டும்ஆலய பூஜகராக நியமிக்கப்பட்டார்,

## ரூ. 10 ஆயிரத்தில் விளையாட்டுமைதானம்

சங்கானை, வெள்ளி

பண்டத்தரிப்பு கிராம சபைக்கு புதிய விளையாட்டு மைதானம் பத்தாயிரம்ரூபா செலவில் நிறுவ முயற்சி செய்யப்படுகிறது.

நீண்டகாலமாக பண்டத்தரிப்பு கிராமசபைப் பகுதிக்கு வசதியான பொதுவிளையாட்டுமைதானம் இல்லாத காரணத்தால் கிராமச்சபையினர் 10,000ரூபா செலவில் பொது விளையாட்டுமைதானம் ஒன்றை நிறுவமுன்வந்துள்ளனர். இதற்கான நடவடிக்கைகள்துரிதமாகமேற்கொள்ளப்பட விருக்கின்றன.

## சேவைக்கு பாராட்டு

அச்சுவேலி, வெள்ளி

அச்சுவேலி ஸ்ரேசன் பாடசாலையில் தொடர்ந்து 14 வருடம் கடமையாற்றி நாவலப்பிட்டிக்கு மாற்றலாகிச் செல்லும் திருமதி எஸ். தேவராசாவுக்கு மேற்படி பாடசாலை ஆசிரியர்களால் ஒரு பிரிவுபசாரக் கூட்டம் நடத்தப்பட்டது. தலைமைஆசிரியர் திரு. எஸ். வி. வேலுப்பிள்ளை தலைமையில் இப்பிரிவுபசார நடத்தப்பட்டது. பல ஆசிரியர்கள் அவரது சேவையைப் பாராட்டிப் பேசினர்.

## கூடியவிலைக்கு விற்றதாகவழக்கு

சாவகச்சேரி, வெள்ளி

சாவகச்சேரி யாழ். கண்டி வீதியில் சாவகச்சேரி நீதிமன்றத்திற்கு முன்பாகவுள்ள கடையொன்றின் வர்த்தகர் மின்பால் ஒன்றைப் பத்துச்சதம் கூடுதல் விலைக்கு விற்றார் என்ற குற்றச்சாட்டில் உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

மாஜிஸ்திரேட் வர்த்தகரை ரூபா 1000 பிணையில் செல்ல அனுமதியளித்து வழக்கை பெப்ரவரி 11-ம் திகதிக்கு விசாரணைக்காக ஒத்திவைத்துள்ளார்.

# பொது அறிவும் உள்ளூர் அறிவும்

விடைகள்

1. ஜெனறல் நீ வின் [General Ne Win]
2. திரு. வி. பி. வித்தாச்சி [Mr. V. P. Vittachchi]
3. திரு. ஜோர்ஜ் தோமஸ் [Mr. GeorgeThomas]
4. திரு. எல். பி. ராஜகருணா [Mr. L. B. Rajakaruna]
5. திரு. ஹியூபேட் ஹம்பிரி. [Mr. Hudert Humphrey]
6. திரு. சௌ என் லை [Mr. Chou-en Lai]
7. திரு. வி. ரி. வின்சன்ற் பண்டித [Mr. V. T. Vincent Panditha]
8. திரு. ஹியூபேட் ஏ டீ சில்வா [Mr. Hudert A De Silva
9. திரு. வி. சி. டி. சில்வா [Mr. V. C. De Silva]
10. அமேசன் [Amazon]
11. 175 இருதலை.
12. 193 அடி
13. தலவாக்கலை [Talawakela]
14. கிரிக்கெட் விளையாட்டு [Cricket]
15. உள்நாட்டு அமைச்சு [Home Minister]

[அடுத்த மாதிரி வினாவிடைகள் 24-1-68-ல் வெளிவரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தித் திரட்டு

## 'தமிழர்க்கு சிங்களம் அவசியம்'

தமிழர்கள் இந்நாட்டில் முதல் தரப்பிரஜைகளாக வாழ்வதாயிருந்தால் அரசகரும மொழியாகிய சிங்களத்தைப் படித்தேயாகவேண்டும். தமிழ்பகுதிப் பெற்றோர் கூட்டாக வேண்டுகோள் விடுத்தால் அங்கு சிங்கள ஆசிரியர்கள் அனுப்பிவைக்கக் கூடியதாயிருக்கும்' என கல்குடா எம். பி. தமக்களிக்கப்பட்ட வரவேற்பொன்றில் கூறினர்.

## மரத்திலேறிய பொலிஸார்

மதம்பிடித்த யானைக்கூட்டமொன்றினல் துரத்தப்பட்ட 8 பொலிஸாரும் ஒரு சார்ஜெண்டும் தெய்வாதீனமாக உயிர்பிழைத்தனர். இச் சம்பவம் அனுரதபுரத்தைச் சேர்ந்த மஹா விலாச்சிய என்ற காட்டில் நிகழ்ந்தது. கஞ்சாச்செடி வேட்டையில் இவர்கள் அங்கு சென்றனர்.

தம்மைத் துரத்திக் கொண்டு யானைக்கூட்டமொன்று வருவதைக்கண்ட பொலிஸார் மரங்களில் ஏறிக்கொண்டனர். யானைகள் மறையும்வரை சுமார் 3 மணித்தியாலயங்கள் இவர்கள் மரங்களிலேயே இருந்தனர். எனினும் தமதுவேட்டையைத் தொடர்ந்து செய்த பொலிஸார் காட்டில் கஞ்சாச்செடிகளையும் அவற்றைப் பயிரிட்டவரையும் கண்டுபிடித்தனர்.

## 8 நாட்கள் நடந்து பிரதமரைக் கண்டார்

எட்டு நாட்களாக கால்நடையாக யாத்திரை செய்து பிரதமரை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்தார்கிராமவாசியொருவர். இவரது பெயர் ஈ.டி. பொடிசிங்கோவாகும். கல்லோயாவிலுள்ள தமது குடியேற்றத்திலிருந்து புறப்பட்ட இவர் தம்முடன் தமது கூப்பன் புத்தகத்தையும் கொண்டு சென்ருர். இவர் தமது கூப்பன் புத்தகத்தைப் பிரதமரிடம் கையளித்தார்.

## பலதொகுதிகளில் பிரதமர்

உணவுக்காக வெளிநாடுகளில் எமது பணம் செலவாவதைக்கட்டுப் படுத்தலே இந்நாட்டின் அபிவிருத்தி வேலைகளைக் கவனிப்பது கஷ்டம் என டெடிகமைத் தொகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பிரதமர் திரு டட்லிசேனநாயக்கா கூறினர். பயனுள்ள கல்வியைமாணவர் பெறுவதன் மூலமே நாட்டின் எதிர்காலம் சிறக்குமெனக் கூறிய அவர் தற்போது அமுல நடத்தப்படவிருக்கும் கல்வி முறையின் நன்மைகள் பற்றி விளக்கினர்.

விவசாயத்தில் இங்கு சிறந்தபலன் பெறமுடிந்தால் உணவுக்காக வெளிநாட்டில் செலவிடும் பணத்தை வேறு ஆக்க பூர்வமான துறைகளில் செலவிட முடியுமென மாவனல்லைத் தொகுதியில் கூட்டமொன்றில் பேசுகையில் பிரதமர் கூறினர். யாவும் விவசாயின் கையில் தான் தங்கியிருப்பதாக அவர் சொன்னர்.

கேகாலைமாவட்டத்தொகுதிகளிலும் பிரதமர் சுற்றுப் பிரயாணம் செய்து பல கூட்டங்களில் உரையாற்றினர். கேகாலையில் இரண்டுநாட்கள் தங்கி உணவுஉற்பத்தி வேலைகளைப் பார்வையிட்ட பிரதமர் கேகாலைக் கச்சேரியில் நடைபெற்ற விவசாய மகாநாட்டிலும் கலந்து கொண்டார்.

## மகளிர்இயக்கம் வேண்டும

தமிழையுப் சைவத்தையும் பேணிக்காக்க இயக்க ரீதியாகமுயற்சிகள் மேற்கொள்வது வரவேற்கத்தக்கது என திருக்கோணமலை நகரசபைத்தலைவர்டாக்டர் சிசிவாநந்தன் திருமலை மகளிர் மன்ற ஆதரவில் நடைபெற்ற பொங்கல் விழாவுக்குத் தலைமைவகித்துப்பேசினர்.

## புகார்செய்க

எந்த அரசாங்க அலுவலகங்களிலும் குறைபாடுகள் நிலவுமானல் அவற்றை அந்தந்த அலுவலகத்தலைமையதிகாரிகளிடம் உடனுற்குடன் புகார் செய்யவேண்டியது பொதுமக்கள் கடமையென மொனராகல அரசாங்க அதிபர் படல்கும்புர என்னுமிடத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் தெரிவித்தார்.

## சங்கிலிபறிமுதல் 1000ரூபா அபராதம்

இந்தியா செல்வதற்காகத் தலைமன்னர் பியருக்கு வந்த பிரயாணியொருவர் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டபோது அவர் அணிந்திருந்த பெனியன்தையல் மடிப்புக்குள் சுமார் 3பவுண் எடையுள்ள தங்கச் சங்கிலியொன்று இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பிரஸ்தாப நபர் குற்றத்தை ஒப்புக் கொள்ளவே அவருக்கு 1000ரூபா அபராதம் விதிக்கப்பட்டது சங்கிலியும்பறிமுதல் செய்யப்பட்டது.

---

## சாவகச்சேரி.....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

4-ம்வட்டாரம் எஸ் குமாரவேலு, கே. பொன்னம்பலம், எஸ். சிவப்பிரகாசம்

5-ம்வட்டாரம் பி. ஆர். ஜெயரத்தினம், எஸ். மகாராசா, கே. சிற்றம்பலம்

6-ம் வட்டராம் கே. கனகசபை வி. பொன்னையா, ஏ. சுப்பிரமணியம்.

7-ம் வட்டாரம்:- எஸ். ஆறுமுகம், எஸ். பாலசிங்கம் கே. இராமனுதன், எஸ் பி. சிவானந்தன்.

8-ம் வட்டாரம்;- எஸ். பாலசுப்பிரமணியம், எஸ். கயிலாசபிள்ளை, வி. சின்னத்துரை.

9-ம் வட்டாரம்:- சி. மயில்வாகனம், எஸ். பி. மயில்வாகனம், வி. நமசிவாயம்.

10-ம் வட்டாரம்:- என். கே தர்மலிங்கம், வி. வயிரமுத்து.

11-ம் வட்டாரம்:- வி கனகசபை, வி. சின்னையா, வி. கந்தசாமி ஆச்சாரி ரி. பொன்னுத்துரை. (ந. நி)

---

## வடமாகாணத்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

முத்தையன்கட்டு குளக் குடியேற்றத்திட்டம் சம்பந்தமாக ஒட்டிசுட்டானில் கூட்டப்பட்ட ஒரு மகாநாட்டில் ஆராயப்பட்டது. வவனியா அரசாங்க அதிபர், நீர்ப்பாசன பகுதி பொறியலாளர்கள் ஆகியோரும் மற்றும் விவசாய உத்தியோகத்தர்களும் இம் மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

## எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் உள்ள நகைமாளிகை ஒன்றில் காசோலை மோசடிசெய்ததாக யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்ட வழக்கொன்றில் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

எதிரி, மேற்படி ஸ்தாபனத்தில் 10,000ரூபா பெறுமதியான காசோலையைக் கொடுத்து அதை ரொக்கப்பணமாக மாற்ற முயற்சித்ததாக இலங்கை பீனல் கோர்ட் சட்ட 403, 490 பிரிவுகளின் கீழ் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார்.

எதிரிமீது சுமத்தப்பட்ட குற்றங்கள் நிரூபிக்கப்படாததன் காரணத்தினல் எதிரி விடுதலைசெய்யப்பட்டார்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு சி பரமசிவப்பிள்ளை ஆஜராகியிருந்தார் ந. நி.

## மாநகரசபை கார்ப்பரேஷனுகும்?

கொழும்பு, வெள்ளி

கொழும்பு மாநகரசபையை விரைவில் கார்ப்பரேஷன் அந்தஸ்துக்கு உயர்த்துவதற்கான மசோதா வெகு விரைவில் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் இத்தகவலை வெளியிட்டார்

## மேலும் 40 புதிய டாக்டர்கள்

கொழும்பு, வெள்ளி

மேலும் 40 புதிய டாக்டர்களுக்கு உடனடியாகநியமனம் வழங்குவதற்கு சுகாதார அமைச்சு முடிவுசெய்துள்ளது.

அரசாங்கசேவைக் கமிஷனின் சிபார்சைத் தொடர்ந்தே இம்முடிவு எடுக்கப்பட்டது.

## சேத விபரம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

அல்வாய் தெற்கில் வெள்ளத்தால் சேதப்பட்ட 252 குடும்பங்களின் வீடுகளின் சேதங்களை பருத்தித்துறை காரியாலய உத்தியோகஸ்தர், கிராமசேவையாளர் திரு. கே. இராமச்சந்திரா ஆகியோர் அவ்வீடுகளுக்குச்சென்று விபரங்களைச் சேகரித்துச்சென்றுள்ளனர்.

## நிர்வாகம்...

1ம் பக்கத்தொடர்ச்சி

மாவட்டசபையில் அங்கம் வகிப்பார்கள். அத்துடன் அமைச்சரால் நியமிக்கப்பட்ட மூன்றுபேருக்கு மேற்படாத அங்கத்தவர்கள் இந்த மாவட்டசபையில் அங்கம்வகிப்பார்கள்.

விவசாயமும் உணவும் கால்நடைப்பண்ணை, கூட்டுறவு, கைத்தொழில் மீன்பிடி, கிராமாபிவிருத்தி, வீடமைப்பு. மாவட்ட அபிவிருத்தித்திட்ட வேலைகள் கல்விகலாச்சார விவகாரம், ஆயுள்வேதத்துறை சமூகநலன், சுகாதார சேவைகள் ஆகிய துறை சம்பந்தப்பட்ட நிர்வாகம். மாவட்டசபைகளுக்கிருக்கும்

கல்வி நிர்வாகத்தில் மாவட்டசபைகளுக்கு குறிப்பிட்ட அளவு அதிகாரமே இருக்கும். கனிஷ்ட கல்லூரிகள் ஆரம்பிக்குமளவுக்கே மாவட்டசபைகளுக்கு கல்வித்துறையில் அதிகாரம் இருக்கும். பாடபுத்தகங்கள் பாடத்திட்டங்கள் ஆகியன நிர்ணயிக்கும் அதிகாரங்களும், பரீட்சைகள் நடத்தும அதிகாரமும் மாவட்ட சபைகளுக்கு இருக்காது. கல்விக் கொள்கை பற்றித் தீர்மானிக்கும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடமே இருக்கும்.

# நான்கு பெண்களும் இரு ஆண்களும் கைது

## இளம் பெண் மரணம் எதிரொலி

வல்வெட்டித்துறை, வெள்ளி

பளை வண்ணான் குளத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை செல்வநாயகி என்ற இளம் நங்கைக்கு கருச்சிதைவு செய்து குறைப் பிரசவம் செய்வித்ததாயும், அவரைக் கொலை செய்ததாகவும் சந்தேகத்தின் பேரில் நாகர்கோவிலைச் சேர்ந்த தில்லையம்பலம் சரவணமுத்து, சின்னப்பு செல்வரத்தினம் ஆகிய இருவரையும் தெய்வானைப்பிள்ளை, பஞ்சாட்சரம், நாகதேவி செல்லம்மா ஆகிய நான்கு பெண்களையும் பருத்தித்துறைப் பொலிசார் கைதுசெய்து பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர் செய்தனர். மாஜிஸ்திரேட் சரணமுத்து, செல்வரத்தினம் ஆகிய இருவரையும் இம் மாதம் 25 ம திகதிவரை றிமாண்டில்வைக்கும்படியும் தெய்வானை பிள்ளை, பஞ்சாட்சரம், நாகதேவி, செல்லம்மா ஆகிய பெண்களை தலா 500 ரூபா பிணையில் செல்லுமாறும் உத்தரவிட்டு அடுத்த மாதம் 25-ந் திகதி மீண்டும் கோர்ட்டில் ஆஜராகும்படியும் கட்டளையிட்டார்.

பிறந்த சிசுவைப் புதைக்கப்பட்டிருக்கும் இடத்தை தேடுவதில் பொலிசார் ஈடுபட்டுவருகிருர்.

# இளம் பெண் கோர்ட்டில் சரண்

## வாலிபர் கைது

குரும்பசிட்டி, வெள்ளி

பெற்றோரின் பாதுகாப்பில் இருந்து இளம் பெண் ஒருவரை கடத்திச் சென்று சுமார் 5மாத காலமாக பொலிஸாருக்கு தலைமறைவாக இருந்ததாகக் கூறப்படும் ஒரு வாலிபரை யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்த குற்றப்பிரிவு சார்ஜன்ட் செல்லையா இன்று கைது செய்துள்ளார். சென்ற வருடம் ஆகஸ்ட் மாதம் 19-ந் திகதி முத்துராசா மகள் நவராணி என்ற இளம்பெண்ணை யாழ்ப்பாணம் பண்ணைரோட்டில் வசிக்கும் செல்லத்தம்பி சந்திரபோஸ் என்பவர் கடத்திச் சென்றுள்ளதாகப் பொலிஸில் புகார் செய்யப்பட்டிருந்தது. பொலிசாரிடம் கைதான சந்திரபோஸ் நாளை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் முன்னையில் ஆஜர் செய்யப்படுவார். நவராணி இன்றுநீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்து இரட்சணிய சேனையில பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

### பெண் கடத்தல்

## வாலிபர் இருவர் கைது

குரும்பசிட்டி, வெள்ளி

இளம் பெண் ஒருவரை காரில் கடத்திச் சென்றதாகக் கூறப்படும் வாலிபர்கள் இருவரை சுன்னகம் பொலிசார் மட்டுவில் கிராமத்திலுள்ள வீடொன்றில் வைத்துக் கைதுசெய்துள்ளனர். தற்போது மேற்படி இருவாலிபர்களும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். மல்லாகம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் இவர்களைப் பொலிசார் ஆஜர் செய்வர்.

ஆனைவிலைச் சேர்ந்த ஆர். செல்லம்மா என்ற பெண்மணி சுன்னகம் பொலிஸ் நிலையத்தில் செய்திருந்த புகார் ஒன்றையடுத்தே மேற்படி இரு வாலிபர்களும், இளம் பெண்ணும் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிகிறது இளம்பெண்தற்போதுதமது தாயாருடன் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## 8 அல்ல 81

உடுவில், சனி

சுன்னகம் பட்டினசபை 4ம் வட்டாரத்தில் போட்டியிட்ட திரு. எஸ். சிவஞானத்துக்கு 81 வாக்குகள் கிடைத்தது. 8 வாக்குகள் கிடைத்ததென வெளியாகிய செய்தியை மேற்கண்டவாறு திருத்தி வாசிக்கவும்.


Calling

JAFFNA

Students

COST & WORKS

[Part I & II]

CERTIFIED

[Section I]

December 1968 Examinations

EPSILON S

INTENSIVE COURSES

[Lectures & Tutorials]

to be held at

14/3A Stanley Road, Jaffna

Particulars forms--

EPSILON LTD, Branch Office

14/3A Stanley Road, Jaffna

Enrolment close on Jan. 31

415


## காணவில்லை

சைக்கிள்:

எனக்கு மிகவும் வேண்டிய அன்பர்என்னிடம்17-1-68ல் எனது சைக்கிள் வண்டியை இரவல் பெற்றுக் கடைத்தெருப்பக்கம் போனவிடத்தில் எங்கோ தவறுதலாக விட்டு வந்துவிட்டார் ஆதலால் இதைக் கண்டெடுத்து வைத்திருக்கும் அன்பர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்தில் என்னுடன் தொடர்பு கொள்ளவும். P. சிவபாதசுந்தரம், உதவிச் சிறுப்பர். மெர்க்கண்டயல் வங்கி, யாழ்ப்பாணம். 2098

## நன்றி கூறல்

18-1-68இல் நடந்த சுன்னுகம் பட்டினசபைத் தேர்தலில் இரண்டாம் வட்டார வாக்காளர்கள் கூடுதலாக வாக்களித்து என்னைப் பட்டினசபை அங்கத்தவராகத் தெரிந்தமைக்கு அவர்களுக்கு இத்தால் எமது மனமார்ந்த நன்றியைச்செலுத்துகிறேன். பொ. பொன்னுத்துரை. 1920

## மரண அறிவித்தல்

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த தாணுஐயர், அரிகரஐயர் இவர்களின் தகப்பனுர் பிரம்மஸ்ரீ கு. மகாதேவ ஐயர் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில் ஸ்வர்க்கலோக பிராப்தியானுர்கள். தகவல் தா. மகாதேவசர்மா, இணுவில். 1919

இப்பத்திரிகை 'ஈழநாடு, லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம்20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org